Registered as a News Paper



விலை: 12.00

# ஈழநாதம்

பக்கம் – 16

வெள்ளிநாதம் Weekly


நாதம்—14 வெள்ளி—12 16–22 மே 2003



## நம்பியாரின் அரசியல்





ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி
16.05.2003

# பொரிமாத்தோண்டிகளின் அதிகாரப்போர்

இந்தவார சிறிலங்காவின் அரசியல் நிகழ்வுகளாகப்பார்க்கையில் பொரிமாத்தோண்டி என்ற பழங்காலக்கதைப்பாடல் ஒன்றே நினைவுக்கு வருகிறது.

'நந்த வனத்தில் ஓர் ஆண்டி-அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி-அதை கூத்தாடிக் கூத்தாடிப் பொட்டுடைத்தாண்டி...'

என்ற அந்த பாடல் உங்களுக்கும் தெரிந்த ஒன்றே தான். இன்றைய கொழும்பின் அரசியல் நிலைக்கு இது மிகவும் பொருத்தமான-இலகுவான-தெளிவான ஒரு விமர்சனமாகவே தெரிகிறது.

பாடலில் ஒரு ஆண்டி பற்றியும், அவன் கைக்குக் கிடைத்த ஒரு தோண்டி பற்றியும்தான் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் கொழும்பின் அரசியல் அரங்கில் ஒரு ஆண்டி, ஒரு ஆண்டிச்சி மற்றும் அவர்களின் கைக்கெட்டியதூரத்தில் இருக்கும் சில அபூர்வமான தோண்டிகள்... அதை அவர்கள் அதிகார வெறியுடன் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைக்கத் தொடங்கியுள்ள காட்சிகள் தென்படத்தொடங்கியுள்ளன.

ஆண்டி-ரணில்-பிரதமர்
ஆண்டிச்சி-சந்திரிகா-சனாதிபதி

தோண்டிகள்-சமாதானம், அதற்கான சர்வதேச ஆதரவு, அதன் மூலம் கிடைக்கக் கூடிய அபிவிருத்திக்கான டோக்கியோ மாநாட்டின் பின்னரான நிதி .... இப்படிப்பல.....

இப்போது உங்களுக்கு அனைத்தும் விளங்கக்கூடியதாக இருக்கும்.

அபிவிருத்திலொத்தர் சபையை அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பொறுப்பிலிருந்து சனாதிபதி சந்திரிகா திடீர் அபகரிப்புச்செய்ததை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி சிறிலங்காவின் அரசியல் ஸ்திரத்தன்மையை மட்டுமல்ல அமைதிப் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலத்தைக்கூட துல்லியமாகத்திட்டமிடமுடியாத ஓர் நிலையை நோக்கி இழுத்துச் செல்லும் அவலத்திற்கு இட்டுச்செல்லப்போவதாகவே தெரிகிறது.

அது மட்டுமல்ல, ஏற்கனவே விடுதலைப்புலிகளின் பற்கேற்புப்பற்றிய விவகாரத்தால் சிக்கல்களை எதிர்நோக்கும் டோக்கியோ மாநாட்டு விவகாரம், இந்த அரசியல் நெருக்கடி காரணமாக மேலும் சிக்கலாகும் நிலையே தென்படுவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

அபிவிருத்திலொத்தர் சபை ஆக்கிரமிப்பு ஏற்படுத்தியுள்ள அரசியல் நெருக்கடி சிறிலங்காவின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக கடந்த சில மாதங்களாக ஏற்படுத்திவந்த நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்புகளை சிதைத்துவிடக்கூடிய நிலைஏற்படக்கூடும் என எண்ண வைத்துள்ளது.

அத்துடன். பொதுவாகவே பலவீனமான பெரும்பான்மையுடன் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற, அதிகாரவலுவற்ற, ரணிலின் அரசுக்கு இருந்த் ஒரே ஒரு நம்பிக்கையான சமாதானப் பேச்சு வார்த்தையின் அடிப்படையிலான சர்வதேச ஆதரவுப்பலம் இன்றைய இந்த அரசியல் நெருக்கடியில் எந்த வகையில் ரணிலுக்கு முண்டுகொடுக்க உதவப்போகிறது என்பதும் ஊகிக்கமுடியாத ஒன்றேயாகும்.

சந்திரிகாவின் இந்த அதிரடி அதிகார நடவடிக்கை சமாதான நகர்வை இலக்கு வைத்த-ஒரு மறைமுகமான நன்கு திட்டமிட்ட நடவடிக்கை என்றுதான் கூறவேண்டும்.

சந்திரிகா, பாதுகாப்பு அமைச்சையோ, உள்துறை அமைச்சையோ அல்லது ஊடகத்துறையையோ, பொறுப்பேற்றிருந்தால் அதாவது அபகரித்திருந்தால் அதற்காக அவர் வைக்கக்கூடிய நொண்டிச் சாட்டுக்கள் பல உண்டு....

ஆனால் அபிவிருத்தி லொத்தர் சபை 'அபகரிப்பு' நடவடிக்கைக்கு வலுவான காரணங்கள் எதுவும் இல்லாவிட்டாலும் அவர் வலுவான இலக்கையே அதற்கான தேர்வாக எடுத்துள்ளார் எனத்தெரிகிறது.

இலக்கு- மிலிந்தமொறகொடதான்.

மிலிந்தமொறகொட-ரணிலின் மிக நெருங்கிய நண்பர்.
மிகவும் நம்பிக்கையான, பொருளாதார விவகாரங்களுக்கான ஆலோசகர்.

சமாதான முன்னெடுப்புகளில் தீவிரமாக இயங்குபவர். ரணில் அரசுக்குத் தேவையான நிதி வழங்கலை மேற்குலக நாடுகளில் இருந்து பெற்றுக் கொடுக்க தீவிரமாக இருப்பவர். அந்த நாடுகளின் மிக விசுவாசகமான நண்பர்.

எல்லாவற்றிலும் மேலாக அமெரிக்காவினதும், அமெரிக்க ஆதரவு நாடுகளினதும் நம்பிக்கைக்கு பாத்திரமான, அந்த நாடுகளின் இலங்கை மீதான அபிலாஷைகளுக்கு உதவக்கூடிய நண்பர்... ஒரு வகையில் அமெரிக்காவின் உறவினரும் கூட.

ஆகவே தான் சந்திரிகா- மொறகொட மீது இலக்கு வைத்துள்ளார் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

எனவேதான்- அபிவிருத்திலொத்தர் சபை அபகரிப்பு என்பது மொறகொடவின் அமைச்சின் மீதான ஆக்கிரமிப்பாக மட்டுமல்ல அரசு முதல் அமெரிக்காவரை தனது அதிகார ஆளுமையை காட்டும் நடவடிக்கையாகவும் சந்திரிகா மேற்கொண்டுள்ளார் என்பதே உண்மையாகும்.

மொறகொடவுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கௌரவப்பிரச்சினை ரணிலுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலேயாகும்.


அது மட்டுமல்ல சமாதானத்திற்கும் அது தொடர்பான ஏனையசெயற்பாடுகளுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுமாகும். இது டோக்கியோ மாநாட்டின் அநுகூலங்களை ரணில் அரசு பெற்றுக்கொள்ளக்கூடாது என்பதையும் குறியாகக்கொண்டது என்பதில் ஐயமில்லை.

டோக்கியோ மாநாடு வெற்றிபெற்றால் ரணில் அரசு ஸ்திரமாகிவிடக்கூடும் என்ற அச்சம் சந்திரிகாவுக்கு உண்டு.


ஆகவேதான் இந்த அதிரடி நடவடிக்கையை சந்திரிகா மேற்கொண்டுள்ளார்.

அதிகார அரசியல்- மேலாதிக்க சிந்தனை, பதவிமோகம் தேசத்தின் சமாதான நடவடிக்கையை மட்டுமல்ல... அபிவிருத்தியையும் பாதிக்கும் என்பது நன்கு தெரிந்தும் அதனையே பிரயோகிப்பதானது...

ஆண்டிகளின் மடமாக சிறிலங்காவையும், பொரிமாத்தோண்டிகளின் இடமாகப் பாராளுமன்றத்தையும் உருவாக்கவே வழிவகுக்கும்.




# கூட்டமைப்பின் செய்தி புலிகளின் விருப்பம்



**விடுதலைப்புலிகளுடன்** நடைபெற்ற சந்திப்பின்பின்பு தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்த வடக்குக் கிழக்கை கட்டியெழுப்புவதற்கும் மக்களின் இயல்பு வாழ்வில் சகஜநிலையை ஏற்படுத்துவதற்கும் நிர்வாக ரீதியாகவும், நிதிரீதியாகவும் மற்றும் வேண்டிய துறைகளில் போதிய அதிகாரங்களுடன் கட்டமைப்பு ஒன்று இருத்தல் அவசியம் என தெரிவித்தமை ஒரு முக்கியத்துவம் மிக்க செய்தியாகும்.

ஏனெனில் டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்கு பற்றுவது இன்னும் உறுதிப்படுத்தாத நிலையில் டோக்கியோ மாநாட்டுக்கு முன்பாக இத்தகைய கட்டமைப்பு ஒன்றின் தேவை பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாவது முக்கிய கவனத்தைப்பெற்றுள்ளது.

அரசு புலிகளுக்கு இடையிலான சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பித்ததிலிருந்து பல்வேறு உபகுழுக்கள் அமைக்கப்பட்டதும் பல சந்திப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டதும் இவற்றுக்கூடாக எந்தவொரு காத்திரமான பலனையும் பெற்றுக் கொள்ளமுடியவில்லை என்பதும் இத்தகைய தேவை ஒன்றை எழுப்பியுள்ளது.

ஆனால் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்காக புலிகள் வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப் படவேண்டிய பல்வேறு வேலைத் திட்டங்களோ அதிகமாகஇருக்கின்றது. இவை தொடர்பான எந்தவொரு முன்னேற்றமும் எட்டப்படாது பேச்சுக்கள் தொடர்வதில் ஏற்படுகின்ற சிக்கல்களை களைவதிலேயே பெருமளவான காலம் கழிந்து கொண்டுபோகிறது.

இந்நிலையில் புலிகள் வடக்கு கிழக்கு மக்களிற்கான அடிப்படை உடனடிப்பிரச்சினைகளை தீர்ப்பதாக இருந்தால் கூடஅதிகாரங்களுடன் கூடிய கட்டமைப்பின் ஒன்றின் தேவை தவிர்க்கமுடியாதபடி புலிகளுக்கு எழுந்துள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள இப்பிரச்சினை தொடர்பாக அரசுகூடிய கவனம்செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் அரசு இதில் எத்தகைய வெளிப்பாடுகளை வெளிப்படுத்தப்போகின்றது என்பதிலிருந்துதான் சமாதானப் பேச்சு வார்த்தைக்கும் முடங்கிப் போய்இருக்கும் வடக்குகிழக்கு புனர் வாழ்வு புனரமைப்பு பிரச்சினைகளிலும் பல தளர்வுகளை ஏற்படுத்தும்.

இத்தகைய செயற்பாடு அரசு சமாதானத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையினையும் தமிழ் மக்களுக்குள் எடுத்துச்செல்லும்.

ஆனால் அரசோ டோக்கியோ மாநாட்டின் மூலம் எவ்வளவு நிதியைப் பெற்றுக் கொள்ளலாம்அதனை எந்த வகையில் தென்னிலங்கையில் பயன்படுத்தலாம் என்றவாறு மீளவும் திட்டங்களை வகுத்து தென்னிலங்கை அரசியலுக்குள் ஆதாயங்களை தேடிக்கொள்ள முயல்வது சமதானப் பேச்சுக்களில் பல்வேறு சறுக்கல்களை சந்திக்க வழிவகுக்கும்.

அரசின் வடக்குக்கிழக்கு பகுதிக்கான வழங்கப்பட்ட பல்வேறு வாக்குறுதிகளிலும் முன் மொழிவு களிலும் இருந்து இழந்துபோன நம்பிக்கைக்காரணமாகவே புலிகள் டோக்கியோ மாநாட்டுக்கு முன்பாக போதுமான நிர்வாக நிதி மற்றும் சகல துறைகளிலும் போதிய அதிகாரம் பெற்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென புலிகள் விரும்புகின்றனர்.



இதன் மூலமாவது தமிழ் மக்கள் புலிகள் மீது கொண்டுள்ள எதிர்பார்ப்புக்களை தீர்த்துவிட விரும்புகின்றனர். உண்மையில் அரசு பலகுழுக்களை அமைப்பதும் அதற்கு எந்தவொரு அதிகாரங்களையும் வழங்காது சம்பிரதாய நடவடிக்கைபோல அவற்றைப்பற்றிப்பேசுவதும் பின்னர் அவை கலைவதற்கு காரணமாவதும் எல்லாம் ஒரு காலம் கடத்தும் நாடகமே ஆகும்.

அரசும் புலிகளும் இணைந்து ஏற்படுத்த முனையும் இலங்கைக்கான சமாதானத்துக்கு அரசு இத்தகைய கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டிய கடப்பாடு அதிகமாகவே உள்ளது.

இலங்கையின் இரட்டை ஆட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலையை தனக்குச்சாதகமாகக் காட்டி இத்தகைய விருப்புக்களை தட்டிக்கழிக்க முனையுமா என்பதை தமிழ் மக்கள் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

அரசு பயன்படுத்தும் அவகாசங்கள் என்பவை புலிகள் அரசுகளோடு நடத்திய பல்வேறு பேச்சுக்களில் இருந்து கற்ற பாடம்தான் இவை ஒன்றும் புதிய விடயங்களல்ல.

தாரகன்

# நம்பியாரின் அரசியல்

> **ஈழப்போரின் சமாதான முயற்சிகளில் அரசியல் அனுசரணையாளராக, பொருளியல் அனுசரணையாளராக யார் இருந்தாலும் படைத்துறை அனுசரணையாளர்களைப்பற்றிச் சிந்திக்கும் போது தனக்கு உரிய இடம் தரப்படவேண்டும் என்று இந்தியா விரும்புகிறது என்று எடுக்கலாமா?**

முகமாலைச் சோதனைச் சாவடியில் நிகழ்ந்த ஒரு உரையாடல் இது. சிங்களம் தெரிந்த ஒரு படித்த தமிழரை ராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒருவர் மறித்துக் கதைத்தார்.

"இதோபாருங்கள் இந்தப் பாதைவழியே நீங்கள் எல்லாரும் வந்து போகிறீர்கள்....ஆனால் நாங்கள் மட்டும் போகமுடியாமலிருக்கிறது...'' என்று அந்தப் புலனாய்வுக்காரர் சொன்னாராம்.

''ஏன்....புலிகள் போய் வருகிறார்கள் தானே அப்படி நீங்களும் போக என்னதடை.....?'' என்று அந்தத்தமிழர் கேட்டிருக்கிறார்.

''போகலாந்தான்.....ஆனால் இடையில் ஏதும் நடந்தால்.....?''

''அதற்குத்தான் கண்காணிப்புக்குழு இருக்கிறதே. அதன் உதவியோடுதானே புலிகளும் வந்து போகிறார்கள்..... ஏன் நீங்கள் இந்த யுத்தநிறுத்தத்தை நம்பவில்லையா....?'' என்று அந்தத் தமிழர் கேட்டிருக்கிறார்.

இதற்கு அந்தப் புலனாய்வுக்காரர் பதில் சொல்லவில்லை. ஆனால் சதீஸ் நம்பியார் பதில் சொல்லியிருக்கிறார்

அவருடைய ஆறுபக்க அறிக்கையில் இதுபற்றியும் கூறப்பட்டுள்ளது. அதன்படி கண்டி வீதிவழியே போகும் துருப்புக்கள் புலிகளால் மறிக்கப்படுவதையோ அல்லது சோதனை யிடப்படுவதையோ அல்லது புலிகளின் வழித்துணையுடன் போவதையோ படைத்துறை உயர்மட்டம் விரும்பவில்லை என்று நம்பியார் கூறுகிறார்.

கண்டிவீதி வழியாக சோதனைகளின்றி துருப்புக்களை அனுமதிப்பதை ஒரு நல்லெண்ணச் சமிக்ஞையாகச் செய்வதன் மூலம் உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய பிரச்சினையைச் சுமுகமாக கையாளத் தக்க விதத்தில் படைத்துறை மட்டத்தில் நம்பிக்கை யைக்கட்டியெழுப்ப முடியும் என்றும் நம்பியார் கூறுகிறார்.

ஆனால் நம்பியார் கூறாமல் விட்ட அல்லது கவனியாமல் விட்ட ஒருவிசயம் இருக்கிறது. என்னவெனில் - கண்டி வீதி வழியாக வரும் புலிகள் ராணுவச் சோதனைகளைக்கடந்தே வருகிறார்கள். ஆனால் ராணுவத்தைமட்டும் புலிகள் சோதிக்கக் கூடாதாம். இது எந்தவகை வலுச் சமநிலை? அல்லது சமஅந்தஸ்து?

பொதுவாக நம்பியாரின் அறிக்கை இப்படித்தான் இருக்கும் ஏன்றவொரு கணிப்பு தமிழர்களிடம் ஏற்கனவே இருந்தது.

சிங்களவர்கள் தான் இதில் சற்றுக்கூடுதலான எதிர்பார்ப்புக்களுடன் இருந்துவிட்டது போலத்தெரிகிறது.

ஏனெனில், நம்பியாரின் இரண்டாவது அறிக்கை அங்கே கடுமையாக விமர்சிக்கப்படுகிறது.

ஐலண்ட் பத்திரிகை அவரை இன்னொரு சொல் ஹெய்ம் என்று அழைக்கிறது. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் சமபங்காளிகளாயிருக்கும் "யதார்த்தத்தை'' படைத்துறைத் தளபதிகளுக்குச் சுட்டிக்காட்டியதற்காகவே இப்படியவரை அழைக்கிறது ஐலண்ட்.

அந்த அறிக்கையில் தமிழர்கள் ஓரளவுக்குத்திருப்திப் படத்தக்க அம்சம் அது ஒன்றுதான். அதாவது புலிகள் சமபங்காளிகள் என்ற "யதார்த்தத்தை'' நம்பியார் ஏற்றுக்கொண்டி ருக்கிறார்.

ஆனால் அறிக்கையின் முன்பகுதியில் தான் கூறியவற்றிலிருந்து நம்பியார் அதன் பின் பகுதியில் முரண்படுகிறார்.

புலிகள் சமபங்காளிகள் என்றால், கண்டிவீதி வழியாக வரும் புலிகளை ராணுவம் சோதனை செய்யலாம் என்றால், ஏன் புலிகள் ராணுவத்தைச் சோதனை செய்யக் கூடாது?

மற்றது, அறிக்கையை முழுவதும் படிக்கும் ஒருவரின் மனதில் முதலில் எழும் கேள்வி இதுதான் - நம்பியாரிடம் எதற்கு அறிக்கை கேட்கப்பட்டது? உயர் பாதுகாப்புவலயங்களைப் பற்றிய பரிந்துரைகளா? அல்லது முழு அளவில் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலாக்கம் பற்றிய பரிந்துரைகளா அவரிடம் கேட்கப்பட்டன?

உயர்பாதுகாப்பு வலயம் பற்றிக்கதைப்பதென்றால், முழுப் புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றியும் கதைக்கவேண்டும் என்ற ஒரு தொனி நம்பியாரிடம் காணப்படுகிறது.

அறிக்கையின் முன்பாதி பெருமளவுக்கு புரிந்துணர்வு உடன் படிக்கையில் உள்ள போதாமைகள் பிரச்சினைகள் போன்றவைபற்றியே கூறுகிறது. பின்பாதியிலும் கண்காணிப் புக்குழுவின் போதாமைகள் பற்றி சில இடங்களில் நேரடியாகவும் சில இடங்களில் நாசூக்காகவும் கூறப்படுகிறது.

இப்போதிருக்கும் கண்காணிப்புக்குழுவின் பலம் குறித் தும் நம்பகத்தன்மைகுறித்தும் நம்பியார் நாசூக்காக சந்தேகம் மெழுப்புகிறார். இதன்மூலம் அவர் மறைமுகமாக ஒன்றைக் கூறமுயல்கிறார்.

அது என்னவெனில் - உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றிய பிரச்சினையில் படைத்துறையினர் விட்டுக்கொடுப்பார்களாக இருந்தால், சில சமயம் மறுபடியும் யுத்தம் வெடிக்கும் ஒரு நிலைவந்தால், புலிகளின் திடீர்த்தாக்குதல்களில் இருந்து அவர்களைப் பாதுகாக்கும் வல்லமை இப்போதிருக்கும் கண்காணிப்புக்குழுவுக்கு இல்லை என்பதே.

அதோடு இந்தக் கண்காணிப்புக்குழுவை நம்பி உயர் பாதுகாப்புவலயங்களை விலக்கவோ, குறைக்கவோமுடியாது என்ற ஒரு மறைமுகச் செய்தி அந்த அறிக்கையில் இருக்கிறது.

இதை இன்னும் நேரடியான வார்த்தைகளில் பின் வருமாறு கூறலாம் - நிலவும் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளர்களாக நிற்கும் நாடுகளை விட மேலும் சில நாடுகளை இணைக்கும் ஒரு நிலையே ராணுவத்தைப் பொறுத்தவரை அதிகம் உத்தரவாதமானதாக, பாதுகாப்பானதாக இருக்கும் என்பதே.

இது நம்பியாரின் அறிக்கைக்குப் பின்னாலிருக்கும் சக்திகளை துலக்கமாக அடையாளம் காட்டிவிடுகிறது.

தாங்கள் பங்கெடுக்காத ஒரு சமாதானத்தைவிடவும் யுத்தம் பறவாயில்லை என்று அவர்கள் நம்புகிறார்களா?

அல்லது இலங்கைத் தீவின் சமாதான முயற்சிகளில் படைத்துறை அனுசரணையாளர் பாத்திரம் தமது கட்டுப்பாட்டின் கீழ் வரவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்களா?

இப்படிப்பார்த்தால் நம்பியாரின் அறிக்கையில் வரிகளுக்கிடையில் மறைந்து கிடக்கும் செய்தி ஒன்று உள்ளது.

அதாவது ஈழப்போரின் சமாதான முயற்சிகளில் அரசியல் அனுசரணையாளராக, பொருளியல் அனுசரணையாளராக யார் இருந்தாலும் படைத்துறை அனுசரணையாளர்களைப்பற்றிச் சிந்திக்கும் போது தனக்கு உரிய இடம் தரப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது என்று எடுக்கலாமா?

ஆனால் இதற்கு இப்போதுள்ள கண்காணிப்புக்குழு

**நிலாந்தன்**

அதிகம் உடன்பாடாயில்லைப் போலத்தோன்றுகிறது. நம்பியாரின் அறிக்கை மீதான அவர்களுடைய எதிர்வினைகள் இத்தகைய ஊகங்களையே அதிகம் ஊக்குவிப்பனவாயுள்ளன.

எது எவ்வாறாயினும் நம்பியாரின் அறிக்கை வந்துவிட்டது. இனி அரசாங்கம் தனது நிலைப் பாட்டைத்தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த இடத்தில்தான் ஒரு முக்கியமான விசயத்தை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

நம்பியார் ஒரு ஆலோசகர் மட்டுமே. குறைந்தபட்சம் ஒரு அனுசரணையாளர் கூட இல்லை. அவருடைய ஆலோசனைகள் இலங்கை அரசாங்கத்துக்குத்தான். புலிகளுக்கல்ல. உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றி பரிந்துரைகள் செய்வதற்கே அவர் அழைக்கப்பட்டார். அவருடைய அறிக்கை பரிந்துரைகள் மட்டுமே. முடிவுகள் அல்ல.

அதுவும் அந்தப் பரிந்துரைகளில் படைத்தரப்புப் பிரச்சினைகள் மட்டுமே கருத்திலெடுத்து வரையப்பட்டுள்ளன. இதில் சம்பந்தப்பட்ட சிவிலியன்களிடம் அதாவது மீளக் குடியேறிகளிடம் இதுதொடர்பாக குறிப்பிடத்தக்க உரையாடல்கள் எதையும் நம்பியார் நடத்தியதாக இதுவரை தகவலில்லை. படைத்துறை நோக்கு நிலையிலிருந்து சில சிபாரிசுகளைச் செய்யுமாறு அவர் கேட்கப்பட்டார். அவ்வளவுதான்.

இனி அரசாங்கம் தான் சமாதானத்துக்கான தனது ஒட்டு மொத்த மூலோபாயத்தின் பிரகாரம் சிவிலியன்களின் நியாயங்களைச் செவிமடுத்தும் நம்பியாரின் பரிந்துரைகளை கணக்கிலெடுத்தும் அல்லது நிராகரித்தும் எல்லாவற்றையும் கூட்டிக்கழித்து ஒரு முடிவெடுக்க வேண்டும்.

அதாவது உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிய ஒரு அரசியல் தீர்மானம் இனித்தான் எடுக்கப்பட வேண்டும்.

இதில் நம்பியாருடையவை பரிந்துரைகள் மட்டுமே அவை முடிவாகிவிடா. அதுவும் படைத்துறை நோக்கு நிலையிலிருந்து வந்த பரிந்துரைகள். ஒரு அரசியல் தீர்மானத்தை எடுக்க அவை சிலசமயம் உதவக்கூடும் ஆனால் அவையே ஒரு அரசியல் தீர்மானம் ஆகிவிடாது.

இப்பொழுது அரசாங்கத்தின் முறை.

நம்பியாரின் மீது பழியைப் போட்டுவிட்டு அல்லது சரத் பொன்சேகாவின் மீது பழியைப் போட்டு விட்டு தப்ப எத்தனிப்பது என்பது ரணிலின் நேர்மையை கேள்விக்குள்ளாக்கிவிடும்.

முதலில் அரசாங்கம் இது தொடர்பாக தனது நிலைப்பாட்டை பகிரங்கமாகக் கூறவேண்டும். அது சமாதானத்தைக் குறித்த அரசாங்கத்தின் விசுவாசத்தைப் பிரதிபலிப்பதாய் இருக்கவேண்டும்.

இது சமாதான முயற்சிகள் அதிகம் சோதிக்கப்படும் ஒரு காலம்போலும்.

உலகில் அதிகம் பேசப்பட்ட சில சமாதான உடன்படிக்கைகள் அண்மைக்காலங்களில் கடும் சோதனைக்குள்ளாகி வருகின்றன.

அயர்லாந்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக அமுலில் இருந்துவரும் பெரிய வெள்ளி உடன்படிக்கை அண்மைக்காலங்களில் இறுகிநிற்கிறது. ஆயுதங்களைக் கைவிடுமாறு ஐரிஷ் போராளிகளின் மீது நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்பட்டதிலிருந்து. இப்படியாகியது.

இந்தோனேசியாவில் அசே (ACEH) போராளி களுடனான உடன்படிக்கையும் அண்மைக்காலங்களில் இறுகி நிற்கிறது. இங்கேயும் ஆயுதங்களைக் கீழே போடுமாறு கேட்கப்போய்த்தான் இப்படியாகியது.

இந்த அசே சமாதான முயற்சிகளில் யப்பான் அதிகம் ஈடுபட்டதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

இப்படி, சமாதான முயற்சிகள் அதிகம் சோதனைக்குள்ளாகி வரும் ஒரு காலகட்டத்தில் இலங்கைத்தீவின் சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை நம்பியாரின்



அறிக்கை. நிலவும் இறுக்கத்தைத் தளர்த்த எதுவிதத்திலும் உதவப் போவதில்லை.

நம்பியாருக்காகச் செலவளிக்கப்பட்ட காசெல்லாம் வீண். அவருடைய அறிக்கைக்காகக் காத்திருந்த காலங்களும் வீண். அரசாங்கம் காலத்தை இழுத்தடிப் பதற்காகத்தானா நம்பியாரை அழைத்தது? என்று இப்பொழுது சந்தேகப்பட வேண்டியுள்ளது.

இதற்கிடையில், கொழும்பில் சந்திரிகா ரணிலுக்கு எதிராக ஒரு புதிய போர் முனையைத்திறந்திருக்கிறார்.

ரோக்கியோ மாநாட்டைக் குழப்புவதை இலக்காகவைத்து திறக்கப்பட்ட இப்போர் முனைக்குப்பின்னாலிருக்கும் அதே சக்திகள்தானா நம்பியாரின் அறிக்கைக்குப் பின்னாலும் இருக்கின்றன?

இது, இனி ரணிலுக்கு ஒரு புதியசாட்டு.

கடந்த பதினைந்து மாதங்களாக சந்திரிகாவைச் சாட்டிச் சாட்டியே காலத்தைக் கடத்தியவர் இனி என்ன செய்யப்போகிறார்?

இனியும் யாரைச் சாட்டியேனும் காலத்தைக் கடத்த முடியாது என்பதே புலிகள் அகாசியிடம் கொடுத்துவிட்ட செய்தி.

இனி எதுவும் ரணிலின் துணிச்சல், வேகம், தியாகம், தீர்க்க தரிசனம் என்பவற்றில்தான் தங்கியிருக்கிறது.




# நறுக்கென...

## அதிகாரப்பறிமுதலில் ஆரம்பம்



'கொடுத்தவனே பறித்து கொண்டாண்டி...' என்று வட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பிரபலமான சினிமாப்பாட்டு ஒன்றே இப்போது நினைவுக்கு வருகிறது.

அதாவது ரணில் - சந்திரிகா அதிகார இழுபறியில் சந்திரிகா தனது இறுதி அஸ்திரங்களை பிரயோகிப்பதற்கான வியூகங்களை அமைக்கத் தொடங்கி விட்டார் போல் தெரிகிறது.

அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக் கொண்டமையானது இதன் முதல் நகர்வு என்றே கூறமுடியும்.

ஏற்கனவே ஊடகம் மற்றும் உள்துறையை பொறுப்பேற்பது குறித்து சந்திரிகாவுக்கு, அவரது கதிர்காம ஆலோசகரும், விஜேகுமாரணதுங்காவை கொன்று சந்திரிகாவை விதவையாக்கிய ஜே.வி.பி சிகப்பு தோழர்களும் அறிவுரைகள் வழங்கியுள்ளதாகவும் செய்திகள் சில வாரங்களின் முன் வெளியாகின.

சமாதான 'நகர்வு'களால் உலகம் பெருந்தொகையை அள்ளிக் கொடுப்பதாக நாற்றிசையில் இருந்தும் வாக்குறுதிகளை அள்ளிவீசும் நிலையில் நிதியமைச்சை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாமா என்ற சிந்தனையும் சனாதிபதிக்கு ஏற்பட்டிருப்பதாக சிங்கள அரசியல் வாதி ஒருவர் அண்மையில் கூறியிருந்தார்.

இல்லாவிட்டால் இந்த நிதிகளை ரணில் புலிகளுக்கு வழங்கிவிடுவார் என்று சிங்கள மக்கள் அஞ்சுகிறார்கள் என அவர் அதற்கான காரணத்தையும் விளக்கியிருந்தார்.

மில்லியன் கணக்கில் ஊழல் செய்ததாகக்கூறப்படும் 'மூளை'க்கு பில்லியன் கணக்கில் நிதிவரும் வாய்ப்பு வரும் போது அதனை நழுவ விட மனம் வருமா?

முன்னதாக பாதுகாப்பு அமைச்சை திலக்மாரப்பனவுக்கு கையளித்தாலும் கூட முடிவெடுக்கும் அதிகாரம் ஏதுமற்ற ஒரு 'டம்பி' அமைச்சராகவே அவர் வலம் வருகிறார்.

முப்படைகளின் தளபதி சந்திரிகாவாகவே இருக்கையின் அவர்கள் சந்திரிகாவுக்கு கட்டுப்படும் படைகளாகவே இருப்பர் என்பதில் ஐயமில்லை.


இதனை விடவும் திட்டமிடல், இனவிவகாரம், அரசியலமைப்பு சீர்திருத்தம் என எதுவானாலும் 'சந்திரிகாவின்' அனுசரணையும் அங்கீகாரமுமின்றி ஆளும் ரணில் அரசால் எதுவும் செய்யமுடியாத நிலையே உள்ளது.

எல்லாவகையிலும், சந்திரிகா தனது 'ஆரவல்லி' ஆட்சி அதிகார பலத்தை தருணம் பார்த்து பன்படுத்துபவராகவே உள்ளார்.

போகிற போக்கில், தற்போது ஒரு வெறும் 'றபர்ஸ்ராம்ப்' போன்று இருக்கும் ரணில், இன்னும் சில நாட்களில் அவரும் 'றபர் ஸ்ராம்ப் கைபிடியானாலும் ஆச்சரியப்படமுடியாது.

அப்போது ரணில் 'கொடுத்தவளே பறித்துக் கொண்டாளடி..' என்று பாட நேர்ந்தாலும் ஆச்சரியப்படஏதுமில்லை.

## ஹக்கீம் தீயசக்திகளை இனங்காட்டவேண்டும்



தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே பிளவை ஏற்படுத்தசில தீய சக்திகள் முயல்கின்றன என்று மூதூரில் யப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

சரிதான்...வெறுமனே பொதுவாக தீயசக்திகள் என குறிப்பிட்டால் எப்படி? அவர்கள் யார் என்பதைக் கூறவல்லவா வேண்டும்.

முன்னர் முஸ்லிம் காங்கிரசுக்குள் பிளவு ஏற்பட்ட போதும் முஸ்லிம்களுக்கிடையே பிளவுகளை ஏற்படுத்த சில தீயசக்திகள் திட்டமிட்டுச் செயற்படுகின்றன என இதே ஹக்கீம் அவர்கள் தான் குறைப்பிட்டியிருந்தார்.

'தீயசக்திகள்' மறைமுகமாக செயற்படுகின்றார்களா? அல்லது பகிரங்கமாகவே செயற்படுகின்றார்களா?

மறைமுகமாகவெனில் அவர்கள் யார் எனக்கூறாது தொடர்ந்தும் மறைத்து வைக்க ஹக்கீம் விரும்புகிறாரா.

பகிரங்கமாகவே செயற்படுகின்றார்கள் எனில் அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எதனையும் அவர் மேற்கொள்ளவில்லை?

இங்கே அவர் குறிப்பிடும் தீயசக்திகள் முஸ்லிம் காங்கிரசுகள் அவருக்கெதிராக இயங்கும் நபர்களாஎன்ற கேள்வியும் எழாது இருக்க முடியவில்லை...

ஏற்கனவே உட்கட்சிப்பிரிவுகளால் முஸ்லிம் மக்களின் ஒருமித்த பலத்தை தாங்களே சிதைத்து வைத்து தங்களைத்தாங்களே தாக்கி, அவமதித்து, அழித்து முஸ்லிம்மக்களின் எதிர்காலத்தையே பேரினவாத சக்திகளின் அபிலாஷைகளுக்கேற்ப 'பாழடித்து' சுயபதவி அபிலாஷைகளை இலக்கு வைத்து அதிகார சக்திகளின் பகடைக்காய்களாக இயக்கிகொண்டிருக்கும் முஸ்லிம் மக்களின் தலைமைகள் குறித்து இந்த மக்களே கவலைப்படும் நிலையில் 'தீயசக்திகள்' என அமைச்சர் குற்றம் சுமத்தும் நபர்களை பகிரங்கமாக 'இன்னார்' எனத் தெளிவுபடுத்த வேண்டியபொறுப்பை ஹக்கீம் நிராகரிக்க முடியாது. தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒருமைப்பாடு என்பது இருதரப்பின் எதிர்கால இருப்பையும்,உரிமைகளையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு என்றும் இல்லாத வகையில் ஒரு அவசியமானதாக உணரப்பட்டு வருகையில் தீயசக்திகளை மறைக்க அமைச்சர் முயல்வது நல்லதல்ல...

இது தமிழ் முஸ்லிம் மக்களின் நல்லுறவை மேலும் நாசமாக்குவதுடன் - முஸ்லிம் மக்களை தங்களின் ஆட்சியதிகார அரசியல் நலன்களை எட்டுவதற்காக பேரினவாத சக்திகள் பிரித்தாள்வதற்கான வாய்ப்பினையும் வழங்கும்.

இதனை ஹக்கீம் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

## வில்லனும்... வில்லாதி வில்லனும்



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரியான சதீஷ் நம்பியார் வில்லனா கதாநாயகனா என்ற கேள்விக்கான விடை ஓரளவு தெளிவாகிவிட்டது.

தமிழ் சினிமா ரசிகர்களுக்கு அந்தபழம் பெரும் மிரட்டல் 'முழி'யும் நக்கல் சிரிப்பும், அகங்காரமிடுக்கும் கொண்ட நம்பியார் ஒரு நிரந்தர 'வெறுப்புக்குரிய' வில்லன் நடிகராகவே திரையில் தோன்றினாலும் தனிப்பட்ட வாழ்க்கையில் ஒரு திரைகதாநாயகனையும் விட நிஜமாகவே நல்ல மனிதன் என்பதும் நன்றாகத்தெரியும். ஆனால் இந்தியாவில் இருந்து, உயர் பாதுகாப்புவலயம் பற்றி சிறிலங்கா அரசுக்கு ஆலோசனை கூறவென இங்கு தகுதியான ஆலோசகர்கள் எவரும் இல்லையென்ற திடமான நம்பிக்கையுடன், இறக்குமதி செய்யப்பட்ட அந்த இராணுவ சிந்தனையாளரான சதீஷ் நம்பியாரின் முதல் வருகையே தமிழ் மக்களுக்கு அவர் மீதான நம்பிக்கையை இழக்க வைத்திருந்தது.

அவரது முகத்திலுள்ள வில்லத்தனத்தை அவர்கள் நன்கு புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

அவரது பூர்வாங்க யோசனைகள் யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா படையின் தளபதியான சரத்பொன்சேகராவின் யோசனைகளுக்கு ஜல்ரர் போடுவதாகவே அமைந்திருந்தது.

அதற்கு ஏற்பட்ட மக்களின் எதிர்ப்பும், விடுதலைப்புலிகளின் கண்டனமும் அவரை மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பி மீள் ஆலோசனையை மேற்கொள்ள வைத்தது.

ஆனாலும் சட்டியில் உள்ளதுதானே அகப்பையில் வரும்இராணுவ அதிகாரி ஒருவரின் இராணுவ நலன் சார்ந்த அணுகுமுறை தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்காது என்பதை மீண்டும் அவர் நிரூபித்துள்ளார் போல் தெரிகிறது.

இச்செய்தி எழுதும்வரை நம்பியாரின் வில்லத்தனமான அறிக்கை எத்தகைய ஆலோசனைகள் அதிர்ச்சியையூட்டும் வகையில் கொண்டுள்ளது என்பதை முழுமையாக அறிந்து கொள்ளும்வகையில் வெளியிடப்படவில்லை.

ஆனால் உறுதிப்படுத்தப்படாத தகவல் கசிவுகள் நம்பியாரை நம்பி யாரும் இருக்கக் கூடாது என்ற செய்தியையே தமிழ் மக்களுக்கு உணர்த்துவதாக உள்ளது. நம்பியார் என்ன தமிழ் மக்களின் தம்பியாரா அவர்களின் நலனைக்கருத்தில் கொண்டு செயற்படுவற்கு என்கிறார் ஒருவர் அவரது கேள்வி நியாயமானது தான்.

மக்களுக்கும் - அவர்களின் வாழ்வியல் உரிமைகளுக்கும் இராணுவத்தின் அப்பட்டமான ஆக்கிரமிப்பு அதிகாரத்திற்கும் இடையிலான பிரச்சினைக்கு தீர்வுகாண ஒரு இராணுவ அதிகாரியிடம் ஆலோசனை கேட்கமுற்பட்டபோதே அந்தநபரின் சிந்தனை எவரின் நலனை கருத்திற்கொண்டதாக இருக்கும் என்பதை தமிழ் மக்கள் நன்கே உணர்ந்திருந்தார்கள்...

இப்போது -

சரத் பொன்சேகா = நம்பியார் என்ற சமன்பாடு சரியாகவே இருக்கிறது.

'சமாதானம் ' என்பது மக்கள் நலன் சார்ந்த விடயமாகும் இராணுவ நலனின் அடிப்படையில் சிந்திப்பவர்கள் யுத்த சிந்தனையாளர்களாகவே இருக்க முடியும்.


உள்ளூர் சரத் பொன்சேகாவாக இருந்தாலும் சரி, இறக்குமதி நம்பியாராக இருந்தாலும் சிந்தனை ஒன்றாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை....

சரத் பொன்சேகா தனது அறிக்கையில் தன்னை ஒரு வில்லனாகவே இனங்காட்டினார்.

எனவே நம்பியார் தன்னையொரு வில்லாதி வில்லனாகவே இனங்காட்ட முனைந்திருப்பார் என்பதில் ஐயமில்லை....

இல்லாவிட்டால் 'இறக்குமதி'க்கு அர்த்தமில்லாமல் போய்விடுமல்லவா?!

## மதவடி மயிலர்



செய்தி:- அரசிடம் ஆயுத உதவி கோருகிறது ஈ.பி.டி.பி தமது பாதுகாப்புக்கு ஆயுதங்கள் அவசியமாம்....!

*மயிலர்:- இப்ப ஏதோ அவையிற்ற ஆயுதம் எதுவும் இல்லை எண்ட மாதிரியெல்லே கதையிருக்கு... அவைக்கு ஆயுதம் கொடுத்தா.... பிறகு அவையிற்றை இருந்து தங்களைப் பாதுகாக்க சனத்துக்கும் எல்லே ஆயுதம் குடுக்க வேணும் பாருங்கோ.... நிமலராஜனைப் போன்று எத்தனைபேரைக் கொன்றொழித்த கும்பல் இனியும் ஆரைக் கொல்ல ஆயுதம் கேட்குதோ.... அவைக்கு பாதுகாப்பு வழங்குமாறு அக்கறை காட்டும் அந்த அதிகார அம்மையாருக்கே வெளிச்சம்.*

செய்தி:- சமாதான முயற்சிகளில் இந்தியா இனி தீவிரமாக அக்கறை செலுத்தும்... சமாதான செயலகம் அறிவிப்பு....

*மயிலர்:- அக்கறை செலுத்த வேண்டிய அளவுக்கு அவையின்ரை பிராந்திய ஆதிக்க அபிலாஷைகளுக்கு ஆபத்து வந்து கொண்டிருக்கு பாருங்கோ பின்ன தமிழரின்ரை பிரச்சினை நியாயமாக தமிழ் மக்களின்ரை அபிலாஷைகளுக்கேற்ப தீர்க்க வேண்டுமென்ற ஆர்வத்தாலை அக்கறை காட்டின மென்றே நினைக்கிறியள்....? சோழியன் குடுமி சும்மா ஆடுமே...!*

செய்தி:- யாழ் கோட்டை முன்பாக மறியற் போராட்டம் படைமுகாம் அமைப்பதை எதிர்த்து வெகுஜனக்கிளர்ச்சி.

*மயிலர்:- ஒரு காலத்திலை கோட்டைக்குள்ள எங்கட சனத்தை மறியல் வைச்ச காலம் போய்... இப்ப எங்கட சனம் கோட்டையை சுற்றி மறியல் செய்யிற காலம் வந்திருக்கு பாருங்கோ.... முந்தியண்டா சனத்துக்கு கோட்டைப்பக்கம் போகவே பயம் அதுக்குப் பக்கத்திலை இருந்த பொலிஸ் ஸ்ரேசனுக்கும் போகப்பயம்.... அந்தப் பக்கம் இருந்த முனியப்பருக்கும் பயம்.... இப்ப அங்கை படைமுகாம் அமைக்கத்தடை போடுது சனம்... இந்த எழுச்சி இல்லாட்டி எங்கட சனத்தை எப்பவோ அழிச்சிருப்பாங்க பாருங்கோ...*

# மெல்லத்தமிழ் இனி சாகுமா...?

சிறி.இந்திரகுமார்

ஒருமுறை பாரதியாரின் கவிதைகளை வாசித்து கொண்டிருந்த போது ஒரு கவிதை என்னை மிகவும் பாதித்தது.

அந்த கவி வரிகள் இவைதான்.
மெல்ல தமிழினிசாகும்
அந்த மேற்கு மொழிகள்
புவிமிசை யோங்கும்

.............................

இந்த கவி வரிகளையும் பாரதியையும் இப்போது இங்கு சொல்லி நினைவுப்படுத்த வேண்டியுள்ளது.

ஏனென்றால் நாம் திரும்பும் திசையெங்கும் இப்போது தமிழை பார்க்க வேண்டியதற்கு பதிலாக தேடவேண்டியிருக்கின்றது.

இந்த அளவிற்கு தமிழ் காணாமல் போகிறது - இப்படியென்றால் நாம் தமிழைத் தொலைத்துவிட்டோமா? அல்லது தொலைத்துவிட நினைக்கின்றோமா?

உண்மையில் சொல்லப் போனால் நாம் ஒரு போதும் தழிழை தொலைக்க நினைக்கவும் இல்லை, தமிழை மறக்கவும் இல்லை. ஆனால் தமிழை தமிழரிடமிருந்து பறித்துக் கொள்ள நினைக்கிறார்கள்.

சாத்தியமான எல்லா வகையிலும் தமிழிற்குள் வேற்று மொழியின் கலப்பை திணித்துவிட முயல்கிறார்கள்.

இதனை ஒரு பெரிய பிரச்சினை இல்லாதது போல காட்டிக்கொண்டு மிகப் பெரிய பிரச்சினையை கையாள்கிறார்கள்.

இன்று நாம் காண்கின்ற காட்சிக்குள்ளும். கேட்கும் பேச்சுக்குள்ளும் ரசிக்கும் பாடலிற்குள்ளும். வாசிக்கும் பத்திரிகைகளுக்குள்ளும் .ஏன் நாம் நுகரும் பொருட்களுக்குள்ளும் என எல்லா வகையிலும் தமிழை சிதைக்கும் நோக்கோடு வேற்று மொழிப் பிரயோகம் திணிக்கப்பட்டுள்ளது.

கூர்ந்து நோக்குமிடத்து தமிழை ஒரு கலப்பு மொழியாக மாற்றும் ஒரு சதி நடக்கிறது.

நாம் வாழ
நம் நாடு வாழ
நம் மொழி வாழ வேண்டும் என்ற சிந்தனையை எம்மிடமிருந்து திருடிக் கொள்ளநினைக்கின்ற சக்திகளே அதிகமாக இருக்கின்றது.

நாம் தமிழராய் வாழ இந்தத் தீவுக்குள் எவ்வளவு விலை கொடுத்து கடுமையாகப் போராடினோமோ அதைவிட அதிகமாக கடுமையாக தமிழை வாழ வைக்கப் போராடவேண்டியிருக்கிறது என்பதுமெய்.

பாரதியாரின் அந்த கவிதையில் உள்ள வரிகளில்.

சென்றிடுவீர் எட்டுத்திக்கும்
கலைச் செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்...

என்று அரிய கலைச் செல்வங்களை கொண்டுவரவேண்டுமென்று பாடினார்.

ஆனால் பாரதியாரின் பாடலை தவறாக தமிழன் புரிந்து கொண்டானோ என்னவோ அரிய கலைச்செல்வங்களை இங்கு கொண்டு வந்தானோ இல்லையோ பிற மொழிகளை மட்டும் தமிழிற்குள் கொண்டுவந்து விட்டான்.

தமிழை தமிழ் என்று தெரியாத அளவிற்கு. சிதையும் வண்ணம் கொண்டு வந்து விடக்காரணமாகவும் இருக்கிறான்.

***

நான் அன்றொரு நாள் ஒரு வீட்டிற்கு சென்றிருந்தேன் குடும்பத்தில் அனைவரும் அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஆறுதலாக இருந்து பொழுதைக் கழிப்பதற்கென படம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நான் என்னப்படம் என கேட்டேன் அதற்கு எனது நண்பர் படங்களின் பெயர்களை சொன்னார்.

ரண்
ஸ்ருடன் நம்பவண்
லவ்டுடே
பிரன்ஸ்

என அடிக்கிக்கொண்டிருந்தார். அந்த பெயர்களிற்குள் எதற்கும் தமிழின் பெயர் இருக்கவில்லை.

இங்கு நான் சினிமாவைப்பற்றி எழுதுவதால் அதிகமானோருக்கு வெறுப்பாக இருக்கலாம்.

ஏனென்றால் எங்களில் பலரிற்கு சினிமாதான் ஒரு பொழுது போக்கு சாதனமாக இருக்கின்றது.

ஆனால் இந்த சினிமாக்காரர்களும் என்ன செய்கின்றார்கள் என்றால்

அனேகமானோருடைய இந்த பலவீனத்துக்குள் அவர்கள் தங்கள் பலத்தை பிரயோகித்து தமிழை கெடுக்கிறார்கள்

சினிமா என்ற சாதனம் தமிழை கெடுப்பதிலும் சிதைப்பதிலும் பாரிய பங்கை வகிக்கிறது.

இந்த சினிமாவிற்கூடாக கருத்து மாற்றத்தையும் சிந்தனை மாற்றத்தையும் புகுத்தி தங்களுடைய காரியங்களை நகர்த்தி விடுகிறார்கள். அங்கே நாம் தமிழை தேடவேண்டியிருக்கிறது இன்னும் கொஞ சக்காலம் போனால் தமிழனையும் தேட வேண்டியிருக்கும் என்ற நிலைக்கு சினிமா தன்னுடைய காரியத்தில் கவனமாக இருக்கிறது.

படம் பார்த்து விட்டு வந்த எனது மருமகன் கூறினான் மாமா லடுக்கா.... என்று சொல் என்று. நான் லடுக்கா என்று சொல்ல அவன் அதற்கு பதிலாக லடுக்கி... என்றான்.




இதற்கு கருத்து எனக்கு புரியவில்லை ஆனால் என்னுடைய மருமகனை தமிழிற்குள் ளிருந்து பிரித்துவிட முதல் காலடி வைக்க முயல்கிறார்கள் என நான் நினைத்தேன் உண்மையும் கூட அதுதான்.

****

இன்று வெளிவருகின்ற ஊடகங்களும் ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

ஊடகங்களும் ஒரு சினிமாத்தனமான ஊடகப் போக்கையே கையாளத் தொடங்கியுள்ளன.

நான் எடுத்துக்காட்டாக சில பத்திரிகைகளின் பெயர்களை குறிப்பிட விரும்புகிறேன்.

மெட்ரோநியூஸ்
ஜீனியர் விகடன்
ஜீனியர் பேப்பர்
இந்தியா டுடே
ஜங்சன்
ரிப்போட்டர்
கெல்த்

இப்படி தமிழ்ப்பத்திரிகை என்ற பொதுவான தோற்றப்பாடுகளிற்குள்ளிருந்து கொண்டு ஆங்கிலப் பெயர் பத்திரிகை நடத்துகின்றனர்.

தமிழ் பிறந்ததும் தமிழ்நாடு, தமிழ் வளர்த்ததும் தமிழ் நாடு.... என்றார்கள் எனக்கு என்னவோ தமிழ் இறப்பதும் தமிழ் நாட்டில்தான் என்பது போல இருக்கிறது.

அங்கு பார்ப்பணியர்களின் ஆதிக்கம் அதிகமாகவும் எல்லா மூலகங்களின் கருத்தூட்டல் அவர்களுடையதாக இருக்கிறது என்றால் இங்கு ஏன் இந்த நிலை.

அண்மையில் கொழும்பிலிருந்து வெளிவருகின்ற ஒரு பத்திரிகையைப் பார்த்தேன். அதன் பெயர் தான் ஆங்கிலம் என்றால், அதன் பெயரையும் தமிழிலும்ஆங்கிலத்திலும் கலந்து எழுதியிருக்கிறார்கள்.

இப்படித்தான் இலத்திரனியல் ஊடகங்களும் கூட தமிழை விட்டு வைக்கவில்லை.

ஒரு வானொலி நிகழ்ச்சி ஒன்றிற்கான விளம்பரம் இது.

சாப்பாடு எப்பா....
கொண்டாட்டம்...அச்சா...

இது எம்மவர் காது களிற்குள் கேட்கும் தூரத்திலிருந்து ஒலி பரப்பாகும் ஒரு வானொலி.

இப்படியே தமிழை சிதைக்க பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, அதில் வரும் விளம்பரங்கள் என்று தமிழைச் சீண்டத்தொடங்கியுள்ளனர்.

இப்படியே தமிழை சிதைத்து தமிழிற்குள் வேற்றுமொழிகளை புகுத்துவது மட்டுமல்லாது இவர்களின் அடிப்படை நோக்கமாக தமிழர்களிற்குள் கலப்பு நாகரீகத்தையும் கலப்பு கலாச்சாரத்தையும் திணிப்பதாகவே இருக்கின்றது.

போராடுகின்ற எமது தேசத்திலிருந்து தமிழிற்காய் அதிககுரல்கள் ஒலித்தாலும் கூட தமிழிற்காய் நாம் இன்னும் அதிகமாய் உழைக்கவேண்டியே இருக்கிறது.

சமாதானம் தந்த பரிசுகளிற்குள் இன்று வன்னியில் பாரிய விளம்பரங்கள் எம்மையும் ஈர்க்கின்றன. ஆனால் இந்த விளம்பரங்களுக்குள் தமிழ் அழிந்துபோய் விடக்கூடாது என்கின்ற மானசீகமான கவலை எல்லோரிற்கும் உண்டு.

இரண்டாயிரமாண்டுகளாய்ப் போராடிய யூதஇனம் தன் "ஹீப்ரு" மொழியை பேசிப் பேசியே சாகாது காத்தார்கள் என்றால்.

நாங்கள் எங்கள் தாய் மொழியை சிதைக்க விடாது உடையவிடாது காப்பாற்ற முடியாதா என்ன?

---

# ஏமாந்தவர் பட்டியலில் புலிகளின் பெயர் இடம்பெறாது

வேனிலவன்

**சிறிலங்கா** அரசிற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் சமாதானப்பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாக ஒரு வருடத்தைக் கடந்த நிலையில், தற்போது அது த்டைப்பட்டு நின்று போயுள்ளமை யாவரும் அறிந்ததே!

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட சகலவிடயங்களையும் நிறைவேற்றினாலேயேஎன அரசாங்கத்திடமும், பேச்சுவார்த்தைகளுடன் தொடர்புடைய சர்வதேச பிரதிநிதிகளிடமும் விடுதலைப் புலிகள் தெளிவாகக் கூறிவிட்டனர் என்பதும் தெரிந்த விடயமே.

இலங்கைக்கு உதவியளிக்கும் நாடுகளின் மாநாடு எதிர்வரும் யூன்மாதம் டோக்கியோவில் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இப்பேச்சு வார்த்தைகள் புலிகளால் இடைநிறுத்தப்பட்டமை முக்கியமானதொன்றாகும்.

பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்ட நாள் தொடங்கியே பேச்சுவார்த்தை குறித்த விமர்சனங்கள், எச்சரிக்கைகள் என்பன அரசியல்வாதிகளினாலும், விமர்சகர்களினாலும் கூறப்பட்டு வருகின்றமையை ஊடகங்களினூடாக பார்க்கின்றோம்.

சிங்களப் பேரினவாதிகள் இதனை முழுமையாக எதிர்க்கின்றனர். போர் மீண்டும் மூளக்கூடாது என தமிழ் சிங்கள சாதாரண மக்கள் எதிர்பார்க்கின்றனர். காலங்காலமாக பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் எனக் கூறி முடிவில் தமிழர்கள் சிங்கள அரசுகளினால் ஏமாற்றப்பட்ட வரலாறு மீண்டும் தொடரக் கூடாது என, தற்போதைய தமிழர் பிரதிநிதிகளை தமிழ் அரசியல் வாதிகளும் புத்திஜீவிகளும் எச்சரிக்கும் விதமான கட்டுரைகளும் தமிழ் பத்திரிகைகளில் வெளிவந்த வண்ணமுள்ளன.

இவற்றுள் கடந்த 11.05.2003 அன்று கொழும்பு தமிழ்வாரவெளியீடொன்றில் பிரசுரமான கட்டுரையொன்று முக்கியமானது. பிரபல தமிழ் அரசியல் விமர்சகர்ரொருவர் அதனை எழுதியிருந்தார்.

'தமிழரின் நியாயமான உரிமைகளைப் பெறுவதற்கு சிறிலங்காவின் அரசியல் யாப்பில் எந்த இடமும் இம்மியளவு கூட இல்லை. தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு சரியான அரசியற் தீர்வு சட்டரீதியாக எவ்வகையிலும் சாத்தியமில்லையாயின் நாம் ஏன் தொடர்ந்து சிங்கள அரசியல் தலைமைகளுடன் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்க வேண்டும். எனக்கேட்கும் அவர் - சிறிலங்கா அரசியல்யாப்பில் உள்ள சிக்கல்களை விரிவாக விளக்கியுமுள்ளார்.

சிறிலங்கா அரசியல் யாப்பின் இரண்டாவது பிரிவு - இலங்கையின் ஒற்றையாட்சியினை வரையறை செய்கின்றது. இந்த ஒற்றையாட்சி முறைமை நீக்கப்பட்டாலொழிய தமிழ் பேசும்மக்கள் தமக்கென ஒரு கிராம சபையைத்தானும் ஒழுங்காக பெற்று நடத்த முடியாது என அவர் கூறுவதில் நியாயமிருக்கிறது.

இந்த ஒற்றையாட்சிமுறையை யாப்பில் மாற்றியமைக்க வேண்டுமெனில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு வேண்டும். அதையும் விட சர்வசனவாக்கெடுப்பில் ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் மக்கள் ஆதரவும் தேவை. இது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமில்லை. ஒரு அதிசயத்தால் இது சாத்தியமானாலும். யாப்பின் ஒன்பதாவது பிரிவு இலங்கையின் முதன்மை மதம் பௌத்தம் எனவும், இதனைப் பேணி வளர்க்கும் பொறுப்பு சிறிலங்கா அரசிற்கு உண்டு எனவும் வரையறை செய்கிறது. இப்பிரிவு அரசியல்யாப்பில் உள்ளவரை பௌத்தமதம் சாராத ஒரு மாநில அவை முழுமையானதொரு சட்டமியற்றும் வலுவைப் பெறமுடியாது எனவும் அவர் நிறுவுகின்றார். மேலும் பல சிக்கல்களை விரிவாக எடுத்துக்கூறி 'உள்ளகசுயநிர்ணய உரிமை' என்பதும், அதனை நோக்கியதான அரசியல் தீர்வு என்பதும் பெரியதோர் 'பம்மாத்து' என அவர் சொல்லுகிறார்.

இவற்றை மறுத்து எவரும் வாதாட முடியாது ஆனால்- தற்போது பேச்சுவார்த்தையிலீடுபட்டுக்கொண்டிருக்கும் தமிழர் தரப்புக் குறித்து புஷ் கொண்டிருக்கும் கருத்துக்களுடனும், ஐயங்களுடனும், கோபங்களுடனும் உடன்படமுடியாமல் உள்ளது.

காலங்காலமாக நிலவிவந்த தமிழரின் அரசியல் பேதமையைப்பயன்படுத்தி சிங்கள அரசு தமிழரை ஏமாற்றிக் கொண்டு வந்த வரலாறு இன்றும் தொடர்வதாக அவர் கூறும் கருத்து தவறானது.

புலிகள் 'உள்ளக சுயநிர்ணய உரிமை என இறங்கியது மகா தவறுஎன அவர் குற்றம் சாட்டுகிறார்.

சாதாரண வாசகன் என்ற வகையில் நான் நினைக்கிறேன். இவ்வாறான கருத்துக்களுக்கு விடுதலைப்புலிகள் பதில் சொல்ல மாட்டார்கள். இன்றைய சூழலில் இதற்கானதொரு விளக்கமானபதிலை அவர்களின் வாயால் சொல்வதென்பது புத்திசாலித்தனமானதாக இருக்காது.

(15ம் பக்கம் பார்க்க...)

# உயர் பாதுகாப்பு வலயங்களில் புதைந்த...

**த.திருநிலவன்**



**மக்கள்** வாழிடங்களை மையமாகக் கொண்டு சிறிலங்காப் படையினர் அமைந்துள்ள படைத்தளங்கள் மக்களின் இயல்பு வாழ்வுக்கு குந்தகமாக இருக்கின்றன. யாழ் நகரமையத்தில் உள்ள சிறிலங்கா இராணுவ 512ம் பிரிகேட் தலைமையக உயர்பாதுகாப்பு வலயம் முதன்மையான உதாரணம். இதனை யாழ் நகரமையத்தை அண்டி அமைக்கவே இராணுவம் எண்ணம் கொண்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. கோட்டையை மையமாகக் கொண்டு இராணுவத்தளம் அமைக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளதால் அதனை மறுபரிசீலனை செய்ய கூட்டம் ஒன்றை நடத்தப்போவதாக சிறிலங்காப் பிரதமர் தெரிவித்துள்ளார். சிறிலங்காப் படையினரின் தலைமையகங்கள் மக்கள் வாழிடங்களை மையமாகக் கொண்டிருப்பது வடபகுதியில்த் தான் அதிகமாகும். ஏனெனில் இங்கு மக்கள் நெருக்க மாக வாழ்கின்றனர்.

மக்கள் நெருக்கமான பகுதிகளிலேயே படையினரும் தமது தலைமையகங்களை அமைத்துள்ளனர். ஏனெனில் இராணுவம் வடபகுதிக்கு சொந்தமாக இருந்ததில்லை. வடபகுதியில் ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ளவர்கள் அவர்கள். யாழ் இராணுவமையம் எனக் கூறப்படும் பலாலியில் கூட விமான நிலையப்பகுதியிலேயே சிறிலங்கா இராணுவமுகாம் பிற்காலத்திலேயே அமைக்கப்பட்டது. அங்கும் இராணுவத்துக்குரிய இடம் இல்லை. யாழ்ப்பாணத்தின் பழைய சிறீலங்கா இராணுவ முகாம் எனப்படும் பலாலியின் நிலை அப்படி ஏனைய பகுதிகளில் 1990ன் பின்னரான ஆக்கிரமிப்பின் பின்னரே இராணுவப்படைப்பிரிவுகளை சிறிலங்காஅரசு அதிக மாக்கியது. பிரிகேட்களாக இருந்த இராணுவ கட்டமைப்பு(பலாலி-26ம் பிரிகேட், ஊர்காவற்றுறை-27ம் பிரிகேட், காங்கேசன்துறை-9ம் பிரிகேட், ஆனையிறவு-7ம்பிரிகேட், வெற்றிலைக்கேணி-19ம் பிரிகேட், பூநகரி-10ம் பிரிகேட்,

முல்லைத்தீவு-25ம் பிரிகேட்,மணலாறு-6ம் பிரிகேட், மன்னார்-5ம்பிரிகேட், வவுனியா-4ம்பிரிகேட், திருகோணமலை-22ம் பிரிகேட்,நிலாவெளி-17ம்பிரிகேட், மட்டக்களப்பு-23ம்பிரிகேட்,அம்பாறை-1ம்பிரிகேட்) 1996ன் பின்னரே டிவிசன்களாக விரிவாக்கப்பட்டது. இன்று யாழ்ப்பாணத்தில் 51ம், 52ம், 53ம் (கொமாண்டோ படையினர்), 55ம்டிவிசன்களை இராணுவம்(734 சதுர கிலோமீற்றர்கள்) பரப்பளவில் நிறுத்தியுள்ளது.

சிறிலங்காகடற்படைமணடைதீவு (வேலுசுமணபடைதளம்) அல்லைப் பிட்டி, வேலணை (கச்சதேவ படைத்தளம்),புங்குடுதீவு(ரேட்டஎம்பர-படைத்தளம்), நயினாதீவு,ஊர்கார்வற்றுறை, காரைநகர்(எலர படைத்தளம்) மாதகல்(அக்போ-படைத்தளம்), காங்கேசன் துறை (உத்துற-படைத்தளம்)அனலைதீவு,புதிதாகநெடுந்தீவிலும்தளங்களையும் அமைத்து (204சதுர கிலோமீற்றர்கள்) நிலை கொண்டுள்ளது...

இராணுவம் வலிகாமம் (51-1ம் பரிகேட்-அச்செழு,51-2ம் பிரிகேட்-யாழ் நகரமையம்,51-3ம் பிரிகேட்-சங்கானை,51-4ம் பிரிகேட்-அரியாலை,51-5ம்பிரிகேட்,51-6ம்பிரிகேட்-தென் முன்னரண் பகுதி)

தென்மராட்சி(52-1ம்பிரிகேட்-சாவகச்சேரி,52-2ம்பிரிகேட்-கொடிகாமம்,52-3ம்பிரிகேட்-கிளாலி,)வடமராட்சி(52-4-பருத்தித்துறை) மற்றும் மிருசிவில் முதல் எழுது மட்டுவாள் வரையில் 55ம்டிவிசனி ன் 4பிரிகேட்கள், 53ம்டி விசினின்3ம்பிரிகேட்-நுணாவிலில் தமது உயர் பாதுகாப்பு வலயங்களையும், முகாம்களையும் அமைத்து மக்கள் இடங்களையும் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ளன.

வவுனியாவைப் பொறுத்தவரை தாண்டிக் குளம்முதல் ஓமந்தை விளக்குவைத்த குளம்வரை56ம் டிவிசனின் 4 பிரிகேட் படையினர் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ளனர். வவுனியா வட மேற்கில் இரணை இலுப்பைக்குளத்தை மையமாகக்கொண்டு 21-4ம்பிரிகேட் படையினரும், வவுனியாநகரை மையமாக21-1ம் பிரிகேட் படையினரும், ,மன்னார் பகுதிகளில் 21-2ம்பிரிகேட் படையினர் தள்ளாடியை மையமாகக் கொண்டும்,21-3ம்பிரிகேட் படையினர் கட்டையடம்பனை மையமாகக்கொண்டும் ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ளனர்.

தலைமன்னார்பியரில் சிறிலங்கா கடற்படையினர் (தம்மின்ன-படைத்தளம்,) சனிவிலேஜ்-(புரொசேரா-படைத்தளம்),பேசாலை சிறுத்தோப்பு(-பப்பாசார்ளி படைத்தளம்)பகுதிகளில் மக்கள் வாழிடங்களில் நிலைகொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட நிர்வாகத்தினுள் உள்ள முகமாலை, கிளாலி ஆகிய பகுதிகள் யாழ் தென்மராட்சி சிறிலங்கா உயர்பாதுகாப்புவலயத்தின் 52ம், 55ம் டிவிசன்களின் ஆதிக்கத்தில் உள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகத்துக்குரிய மணலாற்றின் கொக்குத்தொடுவாய், கொக்குளாய் உள்ளிட்ட பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தின் 22ம் டிவிசன்3ம் ,4ம் பிரிகேட்களின் ஆதிக்கத்தில் உள்ளது.

திருகோணமலையின் வடபகுதி தென்னமரவடி உட்பட்ட பகுதிகளும் 22ம் பிரிகேட்டின் ஆதிக்கத்தில் உள்ளன. திருகோணமலையில் பிளான்டன் பொயின்டில் சிறிலங்கா இராணுத்தின் 22ம் டிவிசன் இராணுவத் தலைமையகம் இருந்து நிலை கொண்டுள்ளதால் நகரப்பகுதி பெரும் பாதிப புக்குட்பட்டுள்ளது. அதேபோல் நிலாவெளி, திரியாய், குச்சவெளி, புல்மோட்டை மற்றும் துறை முகப்பகுதிகளில் கடற்படை ஆதிக்கமும் ஆக்கிரமிப்பும் உள்ளது. சிறிலங்கா விமானப் படையினரின் தளங் களும் திருகோணமலையில் உள்ளன. சீனன்குடாவில் சிறிலங்கா விமானப்படைத்தளம் உள்ளது. துறைமுகம் டொக்யார்ட்டில் கடற்படை2ம் தலைமைத்தளம்(திஸ்ஸ-படைத்தளம்) உள்ளது.

மட்டக்களப்பில் ஏனைய பகுதிகளைப் போல் நகரின் கேந்திரப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தின் 233ம் பிரிகேட் தலைமைத்தளம் உயர்பாதுகாப்பு வலயங்களை அமைத்துள்ளது. சிறப்பு அதிரடிப் படை என்றபொலிஸ் பிரிவின் முகாங்கள் மட்டக் களப்பின் பிரதானவீதியில் அமைந்துள்ளன. மட்டக்களப்பின் பொலநறுவை எல்லையிலிருந்து தென்முனை எல்லைவரை பிரதான வீதியில் இராணுவமும் ,அதிரடிப் படையும் முகாங்களை அமைத்தள்ளன. பொலநறுவை எல்லையிலிருந்து வாழைசசேனை வரையான வீதியில் வெலிக்கந்தை, புனானை,தேக்கஞ்சேனை,5ம் கட்டை,3ம் கட்டை, நாவலடிஆகிய இடங்களில் முகாங்களையும் வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலையில் 23-2ம் பிரிகேட் தலைமையகத்தையும் இராணுவம் அமைத்துள்ளது. வாழைச்சேனை முதல் தென்முனை வரை பிரதானவீதியில் வாழைச்சேனை சந்தி, ஓட்டமாவடி, கும்புறுமூலை, ,மொறக் கொடடாஞ்சேனை, சந்திவெளி, சித்தாண்டி,மாவடிவேம்பு, வந்தாறுமூலை,செங்கலடி, எறாவூர், மைலம்பாவெளி, சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, ஊறணி,இருதயபுரம்,நகரம் ,கல்லடி,காத்தான்குடி,மண்முனை, ஆரையம்பதி,புதுக்குடியிருப்பு, செட்டிபாளையம், குருக்கள் மடம், களுவாஞ்சிக்குடி,பட்டிருப்பு,பெரியகல்லாறு ஆகிய இடங்களில் முகாங்களை அமைத்து படையினர் நிலைகொண்டுள்ளன.

மட்டக்களப்பில் சிறிலங்கா கடற்படை,விமானப்படைத் தளங்களும் மக்களுக்கு இடையூறை ஏற்படுத் துவனவாக உள்ளன.

அம்பாறையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரின் ஆதிக்கம் ஆக்கிரமிபபு என்பன தமிழ் மக்களுக்கு பெரும் இடையூறையும் அச்சுறுத்தலையும் தொடர்ந்து ஏற்படுத்தியவண்ணம் உள்ளன.


இலங்கையின் பரப்பளவில் ஒப்பிட்டளவில் சிறிய ஒரு பகுதியாக உள்ள தமிழர்தாயகப் பகுதியில்( இலங்கையின் பரப்பளவு-65610 ச.கி.மீ, தமிழர் தாயகத்தின் பரப்பளவு-18881ச.கி.மீ) சிறிலங்கா இராணுவத்தின் 8டிவிசன்களும் கடற்படையின் 2 பிரதான தளங்களும் ,உபதளங்களும்,விமானப்படையின் 4விமானப்படை விமானநிலையதளங்களும் மொத்தமாக உள்ள 8 மாவட்டங்களில் 6 மாவட்டங்களில் மட்டும் அதிலும் மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் மட்டும் மிகக்குறைந்த அளவில் படைக்கட்டுப்பாட்டுப்பகுதியில் முகாம்கள் உள்ளன. இதில் 734 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் மட்டும் 4டிவிசன் இராணுவத்தினர் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ளனர்.

சிறிலங்கா இராணுவகட்டமைப்பில் போரின் இறுதிக்காலத்தில் ஒரு டிவிசனில் 5000 இராணுவத்தினர் இருந்தனர். புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர் டிவிசன் படை எண்ணிக்கையை அதன் வழமையான எண்ணிக்கையான 9000த்தை எட்டுவதற்கு ஆட்களை நிரப்புவதில் இராணுவத்தலைமை ஈடுபட்டுள்ளது.

சிறிலங்கா படைப் பிரசன்னங்களால் தமிழ் மக்கள் வாழ்வில் இயல்பு வாழ்வு என்பது படைஉயர்பாதுகாப்புவலயங் களிலும் படை முகாங்களின் கீழும்புதைந்து கிடக்கின்றன..

---

## ஊக்கமாத்திரை



# உங்களாலும் முடியும்

**மனிதனை** ஆளுமை உள்ள மனிதனாக மாற்றுவது, அவன் வளரும் சூழ்நிலையும். அவனை வளர்த்தெடுக்கும் வளர்ப்பு முறையும், அவனது செயலாற்றலும் தான்.

நெப்போலியனின் தாயார் சிறு வயதிலேயே, பல வீரக்கதை களையும், அறக்கதைகளையும், மாமனிதர்களின் வரலாற்றுக் களையும் கற்றுக் கொடுத்திருந்தார். அவர் ஒரு மா பெரும் தளபதியாய் உலக ஆளுகை செய்த நெப்போலியனுக்கு நல்ல பழக்க வழக்கங்களையும் சொல்லிக் கொடுத்தார். உண்மை பேசுதல், பெரியோர்க்கு கீழ்ப்படிதல், வறியவர்களுக்கு உதவுதல்... போன்ற நற்குணங்களை மகனுக்கு எடுத்துக் கூறுவதில் ஆர்வமாக இருந்திருக்கிறார். நெப்போலியனும், பெற்றோர் கூறும் வீரக்கதை கேட்டு தாமும் அப்படியிருக்க வேண்டும் என்பதில் துடிப்பாக இருந்திருக்கிறார்.

பள்ளிப்படிப்பிலும் இவர் பற்றுதலாகவே இருந்தார். ஓய்வு நேரமெல்லாம் ஆழ்ந்த சிந்தனையுடன். வரலாற்று நூல்கள் பலவற்றைப்படிப்பதில் நாட்டம் கொண்டிருந்தார். சக மாணவர்களின் கேலிப்பேச்சுக் கெல்லாம் முகம் கொடுத்து பொறுமையைக் கடைப்பிடித்து பொறுமை கடலிலும் பெரிது என்பதனை நன்கு உணர்ந்து அமைதி காத்தவர். படிப்பில் அவர் எப்போதும் முதல்



மாணவனாகவே இருந்தார்.

ஒரு சிறந்த போர் வீரனாக வெளியேறிய அவர் கடைசி வரை நாட்டுக்காகவே உழைத்து தாயை நேசித்தது போலவே தாய் நாட்டையும் நேசித்தார். தவறு செய்வோரை அன்புடன் கண்டித்து திருத்து வதில் வல்லவர்.

பெரியோரை மதித்து போற்றும் உயர் குணத்தை இள வயதிலேயே கொண்டிருந்தார். வாசிப்பு மனிதனை பூரண மனிதனாக்கும் என்பதை நெப்போலியன் இளைய பருவத்திலேயே உணர்ந்திருந்தார். நல்ல நல்ல புத்தகங்களை ஆர்வத்தோடு வாசிப்பது நற்பயனை அளிக்கும். ஆர்வமும், மன உறுதியும் கொண்ட இவர் நேரத்தை வீண் விரையம் செய்யாது தக்கப்படி பயன் படுத்துவதில் வல்லவர்.

அவரின் வரலாற்றைப் படிக்கும் போது நாம் எப்படி நேரத்தை வீண் செய்கின்றோம் என்பதையும், எப்படி வாழவேண்டும். என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

அளவற்ற துன்பங்களை எதிர் கொண்ட போதெல்லாம் தன்னலமற்ற தாங்கு சக்தியை வளர்த்துக் கொண்டவர், எப்போதும் உயர் எண்ணங்களைக் கொண்டவராகவே வாழ்ந்தார். ஆழ்ந்த சிந்தனையின் பின் செயலாற்றும் தன்மை கொண்டவராய் வெற்றியும் பெற்று, புகழ்பெற்று நிலைத்து நிற்கிறார் இன்னும்.

தேல்வி கண்டு துவண்டதில்லை, விமர்சனம் கண்டு அஞ்சி ஒடுங்கியதில்லை, இரண்டு மணி நேரம் மட்டுமே உறங்கி இரவும் பகலும் அயராது உழைத்தவர். நாட்டு நலனே தன்நலன், அதன் துயர் தன்துயர் இவையே வாழ்க்கையில் இலட்சியம் என்று வாழ்ந்தவர்.

அவரின் விடா முயற்சியும், தன்நம்பிக்கையுமே அவரை உலகத் தளபதியாக்கியது.

முயன்றால் முன்னேற முடியும்.

**வெண்ணிலா**

---

உலகில் கிளர்ச்சியூட்டும் தலை சிறந்த இரு பொருள்கள்; இளமை; கடன். - ஸேம்யல் உல்மன்



## தொடர்கதை

### அத்தியாயம்-09


# இடம் பெயர்ந்தவன்

ஆங்கில மூலம்
பிளானறி ஓ கொணரின்

தமிழில்
சு.மகேந்திரன்

'அந்தப் போலிஸ்காரன் தானகவே இவற்றைச்செய்வதில்லை என நினைக்கிறேன்.' அந்தப் பாதிரியே இவற்றையெல்லாம் செய்விக்கிறான். நான் அந்தப் பாதிரியையே குறை சொல்வேன்.' என்றாள் மிஸிஸ் சோட்லி போலிஸ் குடும்பத்தை பார்க்க அடிக்கடி பாதிரியார் வந்தார். அப்போதெல்லாம் உள்ளே சென்று மிஸிஸ் மக்கின்ரயரை சந்திப்பார். அவள் அங்கு நடைபெற்றிருக்கும் முன்னேற்றங்களை எல்லாம் காட்டுவாள். அவரது கலகலப்பான விஷமக் கதைகளைக் கேட்டபடி இருவரும், அங்கு முழுவதும் அலைந்து திரிவார். இன்னொரு போலிஸ் குடும்பத்தை அங்கு கொண்டு வருவதற்கு அவளை இசையச் செய்வதற்கான முயற்சியில், அவர் ஈடுபட்டுக் கொண்டேயிருக்கிறார் என்ற எண்ணம் மிஸிஸ் சோட்லிக்கு சடுதியாக உண்டாகியது. அப்படி எதுவும் நடந்தால் அங்கு போலிஸ் மொழியைத் தவிர வேறு எதுவுமே பேசப்படாது போகும். அப்போது எல்லா நீகிரோக்களும் போய்விடுவார்கள். தனக்கும் கணவருக்கும் எதிராக இரண்டு குடும்பங்கள் செயற்படும். அவள் ஒரு சொற்பொழிவு நிகழ்வது போல் கற்பனை செய்தாள். போலிஸ் சொற்களும் ஆங்கிலச் சொற்களும் ஒன்றை ஒன்று எதிர்கொண்டன. வசனங்கள் அல்ல சொற்கள் மட்டுமே தென்பட்டன. அவை வீண்வம்பு பேசின. உயரத்துக்கு பறந்தன. கிறிச்சென்று சத்தம் இட்டன. கர்வத்துடன் முன்னே வந்து திரும்பவும் வீண்வார்த்தை பேசின. போலிஸ் சொற்கள் கெட்டவைகளாகவும் எல்லாவித வம்புகளும் தெரிந்தவைகளாகவும் சீர்திருத்தம் அற்றவைகளாகவும் தென்பட்டன. அவை தூய்மையான ஆங்கிலச் சொற்கள் மேல் சேற்றை வாரி இறைத்தன. கடைசியில் இரண்டு மொழிச்சொற்களும் சம அழுக்குடையவையாகின. ஓர் அறைக்குள் உயிர்த்துடிப்பற்ற சொற்களாக அவளதும் அவர்களதும் அழுக்கடைந்து அடைந்து கிடந்தன. இந்தக் காட்சி முன்பு பத்திரிகையில் அவள் கண்ட அறை ஒன்றில் அடைந்து கிடந்த நிர்வாண உடம்புகள் போன்று இருந்தது. 'சாத்தானின் சக்தியில் இருந்து என்னைக் காப்பாற்று' என மெதுவான குரலில் வேண்டினாள்.

தீர்க்கதரிசிகளின் வசனங்களில் இருந்து மேற்கோள்கள் காட்ட ஆரம்பித்தாள். வெகுவிரையில் வாழ்வின் அர்த்தம் அவளுக்கு விளங்கியது.! இந்த உலகம் என்பதன் விளக்கம் துன்பம் எனவும் அது முன்பே திட்டமிடப்பட்டது போலவும், தான் திண்மையானவள் என்பதாள் அத்திட்டத்தில் முக்கிய பங்கு கொண்டவள் என்ற எண்ணத்தை ஐயம் திரிபுற அறிந்து கொண்டவள் போலவும், சர்வவல்லமையுடைய இறைவன் எதைசெய்து முடிக்க வேண்டுமோ அதற்காகவே திண்மையுள்ளவர்களை படைத்திருக்கிறான் எனவும், தான் கூப்பிடப்படும்போது ஆயத்தமாக இருக்கவேண்டும் எனவும் நினைத்தாள். இப்போது எனது முக்கியபணி பாதிரியைக் கண்காணிப்பதே என்ற எண்ணம் அவளுக்கு உண்டாகியது.



அவரது வருகைகள் அவளை வரவர எரிச்சல் ஊட்டியது அவர்கடைசியாக வந்தபோது, கீழேகிடந்த சிறகுகளை பொறுக்கி எடுத்தார். இரண்டு மயில் இறகுகளும் நான்கு ஐந்து வான்கோழி இறகுகளும் பழுதடைந்த ஒரு கோழி இறகையும் தேடிஎடுத்து அவற்றை எல்லாம் ஒன்று சேர்த்து பூச்செண்டு போல் எடுத்துச் சென்றார். அவரது முட்டாள் தனமான இந்தச் செய்கை அவளை எந்த வகையிலும் ஏமாற்றவில்லை; இங்கு ஒருவன், நாடோடிக் கூட்டங்களைப்போல் உள்ள வெளி நாட்டவர்களை எல்லாம், எது அவர்களுடைய இடம் இல்லையோ அங்கே கும்பலாகக் கொண்டு வந்து சச்சரவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான். இதனால் நீகிரோக்கள் தூக்கி எறியப்பட சரியானமுறையில் வாழ்பவர்கள் மத்தியில் பபிலோன் நகரத்து விலைமாதை குடியமர்த்தியது போல் இவர்களை இங்கு குடியமர்த்துகிறான். அதன் பின் பாதிரி அவ்விடத்திற்கு வரும் போதெல்லாம், ஏதாவது ஒன்றின் பின் ஒழிந்திருந்து அவதானித்து கொண்டு இருந்துவிட்டு அவர் அங்கிருந்து சென்றபின்பே வெளியே வருவான்.

ஒரு ஞாயிற்றுகிழமை நண்பகலில் அவளுக்கு சொற்பன தரிசனம் கிடைத்தது. அன்று சோட்லிக்கு முழங்காலில் வலி ஏற்பட்டிருந்ததால் மாடுகளை மேய்த்தபடி மேய்ச்சல் தரையால் மெதுவாக நடந்து கொண்டிருந்தாள். கைகளைக் கட்டிக் கொண்டு சென்றுகொண்டிருந்த அவளது பார்வை, தூரத்தில் தெரிந்த தாழ்ந்த முகில்களில் பதிந்திருந்தது. குவியல் குவியலாக மிகப்பெரிய கடல் ஒன்றின் கரையில் சிதறிக்கிடப்பது போல் அம்முகில்கள் தோற்றம் அளித்தன அவளது பருத்த உடம்பாலும் பார்வைக்கு தோன்று வதைவிட வயதானவள் என்பதாலும் ஒரு ஏற்றத்தைக் கடந்த பின், மிகவும் களைப் படைந்து சிறிது நேரம் ஓய் வெடுத்தாள். (தொடரும்)

---

# பன்முகம்-20

1998 **ஆம்** ஆண்டு நவம்பர் 19 ஆம் நாள் மடுத்திருப்பதி மீண்டும் விடுதலைப் புலிகளின் வசமானது. போராளிகளை கண்ட பொது மக்கள் அவர்களை ஆரத்தழுவி, முத்தமிட்டு, உள்ளதை உண்ணக் கொடுத்து உபசரித்து வரவேற்று மகிழ்ந்தனர்.

மூதாட்டி ஒருவர் பெண்போராளிகளில் ஒருவரிடம் "எப்படியோ மீண்டும் வந்திட்டியள் முதலில் போய் நன்றி சொல்ல அந்த மாதாவுக்கு மெழுகுதிரி கொழுத்துங்கோ" என்றார். அந்தப் பெண்போராளி பதில் கூறுமுன்னரே பக்கத்தில் நின்ற இளம் வட்டம் ஒன்று "மாதாவுக்குக் கொழுத்திற மெழுகுதிரியை அண்ணை (தலைவர்)க்கு கொழுத்துங்கோ என்றாராம். அப்படியிருந்தும் கூட அந்த அம்மா தான் நினைத்ததை அப்பெண் போராளிகளைக் கொண்டு தான் நினைத்தபடி செய்து முடித்தாராம்.

போராளிகள் மடுத்திருப்பதியை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்ட வெற்றிக்களிப்பிலும், பெருமையிலும் தனது சிறுபிள்ளைத்தனத்திலும் அந்த இளவட்டம் அப்படிச் சொல்லியிருந்தால் கூட எமது தேசியத்தலைவர் அவர்கள் அப்படி ஒரு புகழுரையைக் கேட்டு மகிழ்ந்திருக்க மாட்டார் என்பதுவே உண்மை. உறுதியும் கூட.

ஏனெனில் இத்தகைய ஒரு பெரு விருட்சமாய் தான் வளர்ந்து விட்ட இயக்கத்தின் தலைமையைக் கூட தானாக வலிந்து, விரும்பி ஏற்றுக் கொண்டவர் அல்ல. இதய சத்தியுடனும், சுய அர்ப்பணிப்புடனும் எம் போராட்டத்தை முன் நின்று நடத்தக்கூடிய மூத்தவர்கள் பலரிடமும் கேட்டு, அவர்களாலும் முடியாது என்ற நிலையிலேயே தலைமைப் பொறுப்பை தன் தோளில் சுமக்கத் தொடங்கியவர். அப்படியிருந்தும் தான் தலைவர் என்று அழைக்கப்படுவதைவிட தன்னிலும் இளையவர்களால் 'அண்ணன்' என்றும், மூத்தவர்களால் 'தம்பி' என்று தான் அழைக்கப்படுவதையுமே மனதார விரும்புபவர்.

எமது இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிட்டியதும் எந்த ஒரு பதவியும் தனக்குத் தேவையில்லை. எங்கள் போராட்டத்தில் தன்னோடு உறுதுணையாக நின்று ஊனமுற்ற போராளிகளிடையே அவர்களுக்குத் தொண்டு செய்து வாழ்வதே தனது எதிர்கால நோக்கம் என்று இப்பொழுது முதலே சொல்லிக்கொண்டிருப்பவர்.

"என்னை மற்றவர்கள் ஒரு வீரன் என்று சொல்வதைக்கூட நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அந்தத் தகைமையைப் பெற ஒன்றில் நான் எனது இலட்சியத்தில் வென்றிருக்க வேண்டும். அல்லது மாவீரனாகியிருக்க வேண்டும். இரண்டுமே இல்லாத போது என்னை நான் ஒரு வீரன் என்று எப்படி ஏற்றுக்கொள்வது?" என்று அடிக்கடி சொல்லிக் கொள்பவர்.



"தமிழேந்திமாமா தான் எனக்குச் சம்பளம் தாறவர்" என்று தான் பெற்ற பிள்ளைகளிடம் சொல்வதன் மூலம் தன்னை ஒரு தொண்டனாக பிள்ளைகள் நெஞ்சத்தில் பதிய வைத்து நிற்பவர். போராளி ஒருவர் எனக்குச் சொன்னார் "எங்களோட ஒப்பிட்டுப் பார்க்கையில் தனிப்பட்ட வாழ்க்கையில் அண்ணை மிகவும் எளிமையானவர்.

கிழிந்த தன் சாரத்தைதானே தைத்துக் கட்டுவார். வழங்கலுக்கு அவருக்குக் கொடுக்கப்படும் புதிய சவர்க்காரத்தின் மேல் தேய்ந்த பழைய சவர்க்காரத்தை ஒட்டி அதன் முழு உச்சப்பயனையும் பெறுவார்" என்றார்.

## பெருக்கத்துப்பணிவு

தேசியத்தலைவர் அவர்களைச் சந்திக்க ஆயர் குழுவொன்று ஒரு முறை போனது. மிகவும் பாதுகாப்பாக அவர்கள் தலைவரிடம் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள் அங்கே பெற்ற முதல் அதிர்ச்சி என்னவென்றால் தேசியத்தலைவர் அவர்களே அவர்கள் சென்ற வாகனத்தின் கதவைத் திறந்து வரவேற்றமைதான். பின்னர் அவர்கள் நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்த போது அவர்கள் பேசியதை அமைதியாக,முழுமையாக கேட்டுக் கொண்டிருந்தபான்மை அவரது அடக்கமான அந்தப் போக்கு ஆயர்களை மிகவும் ஈர்த்துக் கொண்டதாம்.

அதன் பின்னர் அந்த நாட்களில் அமைச்சராக இருந்த ஈ.பி.டி.பி தேவானந்தாவை அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தாம்.

அவர்களை தேவானந்தா வரவேற்ற விதமும், தன்முன்னே நாற்காலிகளில் அமர வைத்து மற்றவர்களைப் பேசவிடாது சுமார் இரண்டு மணிநேரம் தானே பேசிக்கொண்டிருந்தமையும், இடைக்கிடையே அவர் போட்ட குத்தல் கதைகளும் சென்றவர்களுக்கு அலுப்பையும், ஏன் வந்தோம் என்ற சலிப்பையும் ஏற்படுத்தியதாம்.

இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்டபோது ".... குப்பவிசு வந்தால் அர்த்தராத்திரியில் குடை!" என்ற பழமொழிதான் நினைவுக்கு வந்தது.

"செல்வம் செல்வம்" என்று சொல்லியபடி சென்று கொண்டிருப்பதனாற்தான் "செல்வம்" என்றும், "தரித்திரம், தரித்திரம்" என்று தரித்து இராது போய்க்கொண்டிருப்பதனால் தான் "தரித்திரம்" என்று பெயர் வந்ததாம் என்று பெரியவர் கூறக்கேட்டிருக்கிறேன்.


"பெருக்கத்து வேண்டும் பணிவு சிறிய சுருக்கத்து வேண்டும் நிமிர்வு"

என்று வள்ளுவன் கூறிவைத்ததும் இதுதான். இதே கருத்தைத்தான் பிற்காலத்தில் வந்த சினிமாப்பாடல் கவிஞன் ஒருவனும் "பதவி வரும்போது பணிவு வரவேண்டும் துணிவும் வரவேண்டும் தோழா" என்று அழகாக அர்த்தமுடன் பாடிவைத்துள்ளான்.

நாவண்ணன்

# வெய்யிலோடு காய்கிற வெளி

முல்லைக்கமல்



இந்த இரவில் ஏகாந்தமாய் இருக்கிற பொழுதை சகிக்க முடியவில்லை. வானம் வெள்ளிகளால் நிரம்பியிருந்தாலும் நிலவு வானத்துக்கு இன்னமும் வரவில்லை. ரசனையும் வராது போல. மனசெல்லாம் ஒரேவெறுமை. காற்றும் இல்லை.உடம்பெல்லாம் வியர்வை அரும்ப ஒரேபுழுக்கமாயிருக்கு. இண்டைக்கெண்டு நுளம்புகளும் இல்லை. ஒருவிதமான நெடிநாசியை அரித்தபடியிருக்கு. நெடுகலும் இதுபற்றி யோசிக்கிற போதும் யாரையும் கேட்கவில்லை. என்ன வாயிருக்கும்?

வன்னிக்காட்டில மரங்களின் குளிர்ச்சியெண்டாலும் இருக்கும். இது வெறும் மணல் வெளி. கொஞ்சத்தூரத்தில தரவையிருக்கு. அதுக்கு அயலிலயிருந்து எங்கு பார்த்தாலும் பனங்கூடலும் இடைக்கிடை தெரிகிற தென்னைகளுமாய் தானிருக்கு. மனதில் எழுகிற இந்தக் காட்சிகள் கூட ஏதோ அலுப்புத் தருவதாய்த்தானிருக்கு.

இந்தப் புழுக்கத்துக்கு மணல்ல சேர்ந்து கிடக்கிற உபபுத்தான் உலருதுபோல.

எங்கோ தூரத்தில் ஏதோவொரு பறவை கத்திற ஓசை கேட்குது. என்ன பறவையாயிருக்கும்? மருதங்கேணிக்குச் சமீபமாய் போன கிழமை கூட கூழைக்கிடா வொன்றைச் சுட்டதை நினைக்கும் போது பாவமாயிருக்கு. ஒரு வேகத்தில இறைச்சிக்கெண்டு சுட்டாலும். மனம் என்னவோ முகத்தைத்திருப்பிக் கொண்டபோது சகிக்கமுடியவில்லை.

அதுவெளிநாட்டுப் பறவையெண்டு யாரோ சொன்னார்கள். அதில ஒண்டுதான் இந்தத் தரவைக்குள்ள கத்துதோ! இருக்கலாம்.

இதிலயிருந்து கொஞ்சத் தூரத்தில எங்கட FDLலைத் தாண்டினா சூனியப்பிரதேசமிருக்கு. அதைத்தாண்டிப்போனா ஆமிக்காரன்றைலையின் பொயின்ருகளிருக்கு. இப்போதும் அவன் தங்கட பொயின்ருகளுக்கெல்லாம் பனைதென்னையளத் தறிச்சுப் போட்டுக்கொண்டிருக்கிறான். நேற்றிரவும் தென்னையொண்ட சூனியப் பிரதேசத்துக்குள்ள வைச்சு தறிச்சு விழுத்தினவன். எங்கட நெஞ்சில விழுமாப் போல்தான் அந்த மரம் சாய்ந்தது.

எங்கட மெயின் A9 யினுக்கு கிழக்காலையும் பளைச் சந்திக்கு வடக்காலையுமிருக்கு. சுற்றிவர மண்மூட்டையடிச்சு நடுவில பனையோலையால மேஞ்ச கொட்டகை போட்டிருக்கு. அருகில ஒரு மரம். பாலையாயிருக்கும் போல! அதுக்கருகில பங்கரிருக்கு. இந்த யுத்தநிறுத்தத்துக்கு மூன்று மாதத்துக்கு முன்னம் பனங்குத்திகளெல்லாம் மாத்தி புதுசா சென்றி போட்டிருக்கு. அது போட்டு இப்ப ஆறுமாதமாகியும் புதுசு மாறாமலிருக்கு.

''மாறன் மாறன் மாறன் ஓவர்''

'ஓம் மாறன் மாறன் ஓம் சொல்லுங்கோ'

''அண்ணை எங்கட லையினுக்கு கிட்ட ரெண்டு மூண்டு பேர்'

பதுங்கியிருக்கிறாங்கள். ஆமி போலதானிருக்கு. என்ன செய்ய?

''இண்டைக்குரிய கோட்டைக் கேழுங்கோ நீதன் ஓவர்''

எத்தினைதரமாய் ஆமிக்காரன் ஆத்திரமூட்டிட்டான். போராளியள் பாவம். ஓடரைக் கரியவுட் பண்ணவேணும். ஆமிக்கு எதுக்கித்தனை சேட்டை. யுத்தநிறுத்தம் மேற்கொண்டு மூன்றுமாதமாகியும் ஆமிக்கு அதில நம்பிக்கையில்லை. பகல்ல சூனியப்பிரதேசத்துக்குள்ள வைச்சு நேற்றும் மூன்று பேரை நாங்கள் காணேக்க என்ன மாதிரிச் சிரிச்சுக் கதைக்கிறாங்கள். இரவில ஏனிந்தக் குறளிவித்தை?

தூரத்தில கத்திற அந்தப் பறவையின் குரலை இப்பவும் விட்டு விட்டு கேட்கக் கூடியதாக இருக்கு.

✸ இந்த அதிகாலையிலும் குளிர் இன்னமும் எடுபடேல்ல IBCஅலைவரிசையில எங்கட விடுதலைக்கவிஞன் காசியானந்தனின் பாடலைக் கேட்க பெருமிதமாயிருக்கு. அவற்றை பாடலுக்குத்தான் எத்தனை வலிமை. இன்றைய செய்திகளில் தொணிக்கிற நம்பிக்கையீனத்தை அவற்றை பாடல் தகர்த்து விடுகிறது.

இண்டைக்கு பொன்னம்மான் கண்ணி வெடியகற்றும் பிரிவுப் போராளியள் வருவினம். அவயளுக்குரிய இடத்தை ஒழுங்கு பண்ணவேணும்.A 9 பாதையை அரசாங்கமும் போராளியளும் திறக்கப் போறதாய் செய்தி வந்தபோதும் இந்தப் படையணி எங்கடலையினுக்கு இண்டைக்குத்தான் வருகினம்.

செம வெய்யில். தூரத்தில நிக்கிற யாரையும் தலைநிமிர்த்திப் பார்க்கேலாது. கானல்டிக்க நிக்கிற ஒற்றைத்தென்னை மாதிரித்தானிருக்கு. ஆட்களைப் பார்க்க. என்ன செய்யிறது. எங்கட லையினுக்குள்ள இருக்கிற கண்ணிவெடிகளை அகற்றுறதுக்கு உமையாள் தான் பொறுப்பாளர்.

'வணக்கமண்ணை'

'வணக்கம் வாங்கோ'

''நான் தான் உமையாள் பொன்னம்மான் கண்ணி வெடியகற்றும் பிரிவு:

'ஓ நீங்களா, அறிவிச்சவை முதலும் கேள்விப் பட்டிருக்கிறன். எனக்குப் பெயர் மாறன். இந்த லையினுக்குள்ள என்ன உதவியெண்டாலும் கேழுங்கோ ஒழுங்குபடுத்தலாம்.

இவ வேந்தினி. அவ அகத்தமிழ். இஞ்சாலை வாங்கோ சுடர்விழி. இவ சுடர்விழி.... அறிமுகம் நீண்டு கொண்டே போனது.

' அக்கா தண்ணிவிடாய்க்குது வாங்கித்தாங்கோ'

'தொடங்கீட்டியளே கேட்கிறதுக்கு' சுடர்விழியை உமையாள் பார்க்க சுடர்விழி வேந்தினிக்குப் பின்னால் மறைந்து கொண்டாள். தூரத்தில் காற்றின் வேகத்துக்கு காய்ந்த பனையோலை யொன்று. மரத்தோடு உரசிச் சத்தமிட்டுக் கொண்டிருந்தது.

✸ என்ன இண்டைக்கு சாப்பாடு வரப்பிந்துது. கிச்சின்ல அப்பிடியென்ன சுணக்கம். நேரம் இரண்டுமணியைத் தாண்டீட்டுது. லையின்ல நிக்கிற பெடியள் கத்தப் போறாங்கள். சும்மா எப்போதும் யாரையும் சீண்டிக்கொண்டிருக்கிற கண்ணனுக்கு. நேரத்துக்கு நேரம் வேணும். இதுக்கும் பிந்தினா ஆள் வாடிப் போயிருக்கும். கதையும் வராது. இப்பவும் அவன் ஜெயசிக்குறுவை வர்ணிக்கேக்க சிரிப்பாயிருக்கும். மணலாத்துக் காட்டில அன்பண்ணையுடன் நிண்டதிலிருந்து ஆள் அவிழ்த்து விட்டுக்கொண்டிருப்பான். அவனுக்குள் ஒரு போர்க்கால நாவல் வார்த்தைகளில் இருப்பதாக நான் சிலவேளைகளில் எண்ணுவதுண்டு.

''அண்ணை அக்கா தண்ணிவேண்டிவரட்டாம்''

சுடர்விழி மெயினுக்கு வெளியில் முற்றத்தில் நின்று கொண்டிருந்தாள். 'என்னதுக்குள்ள தண்ணி கொண்டு போகப்போறீங்க கானேதும் கொண்டுவந்தனீங்களோ தங்கச்சி.

'ஓம்' இல்லையெண்டா நீங்கள் ஒழுங்குபடுத்துவீங்கள்தானே

''ஏன் நாங்கள் றேசன் கடையே வைச்சிருக்கிறம்....''

''உங்களுக்கு சாப்பாடு வந்திட்டுதோ'' சும்மா ஒருக்கால் கேட்டேன் ஒரே இடத்தில் இருந்து தானே சாப்பாடு வரவேணும்.

'ஓம் எங்களுக்கு வந்திட்டுது' பட்டென்று சொன்னாள் சுடர்விழி. எனக்கு ஒரே திகைப்பாயிருந்தது. என்னண்டு எங்களுக்கு வராமல். இஞ்சவாங்கோ பிரபா இவையளுக்கு தண்ணி வேணுமாம் அவையள் கொண்டு வந்த கானில விட்டுக்குடுங்கோ''

சுடர்விழி என்னைப்பார்த்து சிரித்தாள் அவளின் சிரிப்பை பார்க்க ஏனோ என் தங்கையின் ஞாபகம் திடீரென்று கண்முன் வந்தது.

வோக்கியை கையிலெடுத்துக்கொண்டு லையினுக்குப் போவதாய் எழுந்தேன்.

'அண்ணை நானும் வாறன்' பிரபா கூச்சலிட்டான். அவனின் தலையில் தொப்பியைப் பார்த்தபோதுதான் என்தலைக்கு தொப்பி போடவேணும் என்று தோன்றியது.

''நீதனை செற்றடியில வந்திருக்கச்சொல்லிவிட்டு வாங்கோ பிரபா''

தூரத்தில் தெற்குப் பக்கமாய் வானத்தில் விமானமொன்று புள்ளியாய் பலாலி நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

✸ 'அண்ணை இன்னமும் சாப்பாடு வரேல்லையோ. பிள்ளையள் பாவம் சோர்ந்து போயிருக்குதுகள்' சொல்லிக் கொண்டு வந்த உமையாளைப் பார்க்க நெருப்புக்குள் நடந்து வருவதைப் போலிருந்தது. என்ன வெய்யில்.

'இன்னும் வரேல்ல'

..........

'இருங்கோ வாறன்.'

மெயின் கொட்டகையின் மூலை மணலுக்குள் கிடந்த மூன்று இளநீரையும் கொட்டிலின் வரிச்சுக்களுக்கிடையில் செருகிக்கிடந்த கரும்புத்துண்டொன்றையும் உமையாளின் கையில் கொடுத்தேன்.

அதை வாங்கிக்கொண்டு தெற்குப் பக்கமாய் கால்கள் புதையப் புதைய மணல்வெளியில் அவர்கள் போய்க் கொண்டிருந்தனர். அவர்களை அந்தவெயிலில் பார்க்க மனந்துடித்தது. எத்தினை மிதிவெடிகளை அவர்கள் மீட்டிருக்கிறார்கள்.... எத்தனை லாவகமாய் இந்த வெய்யிலிலும் கைகளை வீசியபடி அவர்களால் போக முடிகிறது.

மேசையில் இருந்த தொலைத்தொடர்புக்கருவியின் இரைச்சல் காதைப்பிழந்த போதுதான் நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்து விட்டதும். யாரோ தொடர்பெடுக்கிறதும் தெரிந்தது.

'மாறன் மாறன், மாறன் ஓவர் ''ஓம் மாறன் மாறன் மாறன் சொல்லுங்கோ ஓவர்''......

ஓம் நாளைக்கு பத்துமணிக்கு வந்து சந்திக்கிறன். பதிலுக்கு பிரபாவை விட்டிட்டு வரட்டோ அல்லது லையினுக்குப் பொறுப்பாய் யாரையும் அனுப்புறீங்களோ ஓவர்.......

சரி பிரச்சினையில்லை வாறன்.

ஏன் அவசரமாய் வன்னிக்கு வரச்சொல்லுகினம். நாளைக்கு புதுக்குடியிருப்புக்கு போக வேணும். பதிலுக்கு வாறது யாராயிருக்கும். எதுக்கும் ஆள் வரட்டும். எல்லா ஒழுங்கையும் சொல்லிப் போட்டுப் போனாச்சரிதானே.

தூரத்தில் சிவப்பு வாளியில் சாப்பாடு வந்து கொண்டிருந்தது. மூன்று மணி வெய்யிலில் சாப்பாடு கொண்டு வாற போராளியைப் பார்க்க பாவமாயிருக்கிறது. மணல் வெளியால சயிக்கிளைத் தள்ளிக் கொண்டு வாறதைப் பார்க்க. ஏன் இண்டைக்கு சாப்பாடு பிந்தினது'' எண்டு கேக்கேலாது.

இளனிவாங்கிக்கொண்டு போன பிள்ளையள் இத்தனைக்கும் சரியான தூரம் போயிருப்பார்கள். திரும்பிவரச் சொல்லி வோக்கியில சொல்லலாந்தான் பாவங்கள் திரும்பியெல்ல வரவேணும். உந்த மணலும் வெய்யிலும்....

''அண்ணை சாப்பாடு கொண்டுவர கொஞ்சம் பிந்திட்டுது''

''சரி பிரச்சினையில்ல. பிரபா நீதனை செற்றடியில விட்டிட்டு சாப்பாட்டைக்கொண்டு போய் பொயின்டுகளுக்கு குடுத்திட்டுவா. அண்ணை நீங்களும் கூடப் போறியளே.

''ஓம் பிரச்சினையில்ல நான் போறன்''

சாப்பாடு கொண்டு வந்தவனின் முகத்தில் தெரிந்த கலவரம் மறைந்து சந்தோசம் துளிர் விட்டது.

அவர்கள் லையினை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். தூரத்தில் பனைகள் வெய்யிலுக்கு இருண்டு போய்த் தெரிந்தது.

நீதன் இதில வந்து இரு. காச்சல் எப்பிடி. நாளைக்கு நீயும் என்னோடவாறாய்.''

நீதன் எழும்பிவந்து




பனைமட்டையால் செய்த தட்டி வாங்கில் இருந்தான் கண்களும் சற்றுச்சிவத்திருந்தது. காச்சல் குறையேல்லப்போல. தலை இந்தக் கொதிகொதிக்குது ஏன்ராப்பா சொல்லேல்ல. இந்தா இதைப் போடு''

கோல்சர் பாக்கின் சிப்புக்குள்ளிருந்து இரண்டு பெனடோலை நீதனின் கைக்குள் திணித்தான் மாறன்

''நானிந்தச் சாப்பாட்டை கண்ணிவெடிப்பிள்ளையளிட்ட குடுத்திட்டு வாறன் அதுக்குள்ள யாரும் செற்றில கேட்டா. வெளியில போட்டதாய் சொல்லு. ஒருதர் வருவார் இருக்கச் சொல்லு. கெதியில ஓடி வந்திருவன்.

நீதனுக்கு தன்னுடைய பொறுப்பாளரை நினைக்க பெருமையாய் இருந்தது. சேட்டின்ரை முதலாவது தெறியை அவிழ்த்து விட்டு நெஞ்சு வேர்வைகாய இலேசாக ஊதினான்.

தூரத்தில் எங்கேயோ வெடிச்சத்தங்கள் கேட்டது. அனேகமாய் அது சாவகச்சேரிப் பக்கமாயிருக்கும். ஆமிக்காரர் இடைக்கிடை சுறுள் விளையாட்டு விளையாடுறவைதானே. அல்லது பயிற்சிக்காக ஏதும் செய்யினமோ என்னவோ!

✸ ஓரளவுக்கு A9 யின் வீதியில இப்போது அதிகம் பேர் மனிதநேய அமைப்புக்களெண்டு வந்து போகின்றார்கள். ஓரிரண்டு கிழமையில் பாதை திறப்பதாயிருக்கு. யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் மக்கள் பயணிக்கப்போகிறார்கள். இவ்வளவு காலமும் சூனியக் கிழவிபோல கிடந்த A 9 யின் வீதியில் தார் உருகப்போகிறது. கட்டாக்காலி நாய்கள் இரண்டு ஒன்றையொன்று துரத்தியபடி போய்க் கொண்டிருந்தது மூன்று நாலு காகங்களும் இருந்து கொண்டிருந்தது.

நான் வன்னிக்குப் போய் வர ஒரு கிழமையாகிவிட்டாலும். எவ்வளவு வேகமாக A9 யின் வீதியின் இருமருங்கும் சுத்தமாயிருக்கு.

புதுக்காட்டுச் சந்தியைத் தாண்ட பளையிலுள்ள எங்கட மெயினைப் பற்றிய நினைப்பு...

⇨

# நூல் நோக்கு...

நூலின் பெயர்: வளர்பிறை
வெளியீடு: அன்னை இல்லம்
உளவளத்துணை உளவியல் அறிவூட்டல் நிலையம்.
விலை:40

**வன்னி** மண்ணில் உளவளத் துணைப்பணியில் காலூன்றி சேவையாற்றும் அக்கராயன் அன்னை இல்லத்தினர் தமது சிறந்த பணியின் வெளிப்பாடாக 'வளர்பிறை' ஆண்டு மல றொன்றினை வெளியிட்டதன் வாயிலாக அந் நிறுவனத்தினருக்கு கிடைக்கப் பெற்ற ஊக்கமாத்திரை வளர்பிறை சஞ்சிகையினை காலாண்டு சஞ்சிகையாக பிரசவிக்க வழி சமைத்துவிட்டது.




இப்பணியின் கன்னி வெளியீடாக வளர்பிறையின் முதலாவது வெளியீடு இந்நிறுவனத்தினரின் கடுமையான அயராத முயற்சியின் பயனாக முன்பு வெளியாகி யிருந்தது.

முதலாவது வெளியீட்டின் பிரதி யொன்றோடு சந்தித்த நண்பரொருவர் கூறினார். "உளவியற் சஞ்சிகை ஒன்று வாங்கினனான் ஆனால் எதிர்பார்த்ததுகள் ஒன்றும்...? என்று அவரது இழுவையிலிருந்து எதிர்பார்ப்புகள் இல்லை என்ற ஏமாற்றம் தொனித்ததை அவதானிக்க முடிந்தது. "ஓடி விளையாட வேணும் என்று பிறந்த உடனேயே எதிர்பார்க்கிறது நியதிக்கு ஒவ்வாதது தானே. எங்கட எதிர்பார்ப்புகள் எல்லாம் முதலாவது வெளியீட்டிலேயே வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறதும் கஸ்ரம் தானே" என்று என்னாலியன்ற ஒரு ஆற்றுப்படுத்தலை மட்டும் அந்த நண்பருக்கு கூற முடிந்தது. இது இடம்பெயர் வாழ்வோடு இணைந்திருந்த போது வன்னியில் ஒரு குக்கிராமத்தில் ஏற்பட்ட கலந்துரையாடல்.

மிக அண்மையில் சில வாரங்களுக்கு முன்பு அதே நண்பரை வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் சந்திக்கும் வாய்ப்பொன்று கிட்டிவிட்டது. அவர் ஏற்கனவே வாங்கியிருந்த சில பொத்தகங்களுக்கிடையில் வளர் பிறையின் இரண்டாவது காலாண்டு இதழும் செருகப் பட்டிருந்தது அந்த இதழை காட்டி "வளர்பிறை இரண்டாவது வெளியீடு இப்ப வவுனியா கவிதாவிலேயும் கிடக்குது" என்றதோடு நின்று விடாமல் முதலாவது இதழில் எதிர்பார்த்த பல விடயங்கள் இரண்டாவது வெளியீடு- தாங்கியி ருப்பதானது. தனக்கு திருப்தியளிப்பதாகவும் தனது மன வெளிப்பாட்டை தெரிவித்தார்.

உண்மையும் அது தான். வளர்பிறையின் ஒரு துளி உயர்வு கலை 02ல் வெளிப்படுவதை அவதானிக்க முடிகிறது. விடயதானம், அச்சுப்பதிவு, 'வடிவமைப்பு என்பவற்றிலிருந்து உளவளத்துணை நிலையம் தனது நிறைவான செயற்திட்டத்தின் சேவையை செய்யத் துடிப்பது இரண்டாவது வெளியீட்டில் பிரதிபலிக்கின்றது. முதலாவது வெளியீடு கிட்டிய நீண்ட இடைவெளிக்குப்பின் மற்றுமொரு காலாண்டு சஞ்சிகைகளுக்கு எட்டியிருப்பதானது அன்னை இல்லத்தினரின் சமூக ஆற்றுப்படுத்தல் பணியின் அயராதஉழைப்பும், முயற்சியும்மென்பது உண்மை.

எமது மண்ணில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ சுற்றிவளைப்பு, உறவுகள் கைது சிறை வாழ்க்கை இடப் பெயர்வுகளால் ஏற்பட்ட மன அழுத தம், இடம் பெயர்ந்து அந்நிய நாடுகளிலும், சொந்த மண்ணிலே நலன் புரிநிலையங்களிலும் இயல்பு வாழ்வை இழந்து வாழ்தல் போன்ற பல்வேறு துன்பங்களை சுமந்து வாழும் மக்களின் மன அழுத்தங்களுக்கு ஆற்றுப்படுத்தல் செய்ய வேண்டிய பொறுப்பையும் இவ்விதழ் எதிர்காலங்களில் கொண்டுள்ளது.

இப்பணியின் அவசியத்தை உணர்ந்து இரண்டா வது வெளியீட்டில் வெளிவந்துள்ள பத்து ஆக்கங்களில் பெரும்பாலான ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டிருப்பது சிறப்புக் குரியது.

அடிமட்ட மக்களின் விடயங்களை தாங்கிய ஆக்கங்களை பிரசுரிப்பதோடு நின்று விடாமல் அம்மக்களுக்கு இவ்விதழ் சென்றடைய வேண்டிய விநியோக வழியையும் இவ்வெளியீட்டாளர்கள் செய்யவேண்டிய கடமையை கொண்டிருக்கிறார்கள்.

வாசகர்களை இலகுவாக நுகரக் கூடியவாறான விடயதானங்களில் நுணுக்கமான கவனம் அவசியமாகின்றது.

வன்னி மண்ணிலிருந்து வெளிவருகின்ற சஞ்சிகைகளில் உளவியற் சஞ்சிகை என்ற சிறப்பை வளர் பிறை நிலைத்து தக்கவைப்பது அடுத்த வெளியீடுகளில் வெளிவரும் ஆக்கங்களில் தங்கியிருப்பதை வெளியீட் டாளர்கள் கருத்திற் கொள்ளல் மிக அவசியம்.

அன்னை இல்லத்தினரின் இவ்வெளியீட்டு முயற்சிக் கான ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்க வேண்டிய பொறுப்பு இச்சமுகத்தின் பொது நிறுவனங்கள், புத்திஜீவிகள் கல்வியியலாளர்கள் அனைவருக்குமே உண்டு என்பதை விளங்கிக் கொள்ளுதல் மிக மிக அவசியமாகின்றது.

உங்களை உள்ளார்ந்த ரீதியில் வளர்த்தெடுக்க வளர் பிறையினை வாங்கி வாசிப்பதோடு உங்கள் உறவுகளுக்கும் கொடுத்துதவுங்கள்.

**எஸ்.வி.ஆர். கஜன்**

---

அந்தக்கொட்டகையும் அதன் தனிமையும், லையின் போராளி களும் தான் மனதிற்குள் நின்றார் கள்.

UNHCR வாகனமொன்று வேகமாய் எங்களைக். கடந்து போனது. அந்தக் காற்றுக்கு. தலை யிலிருந்து கழன்று போக இருந்த தொப்பியை ஒரு கையால் சரி செய்தபடி மோட்டார் சயிக்கிளை செலுத்தினேன். எனக்குப்பின்னால் இருந்து வந்துகொண்டிருந்த நீதனின் தலைமயிர் காற்றில் அசை ந்து கொண்டிருந்ததை கண்ணாடி யூடாக பார்த்தபோது நீதன் சிரித் தான். எனக்கும் சிரிப்பா யிருந்தது.

நேரம் மதியம் ஒரு மணி யைத்தாண்டிவிட்டது எங்களின் மெயினுக்குவர.

பிரபா குந்திக் கொண்டு எங்களைப் பார்த்தபடியே யிருந் தான். செற்றுக்குப்பக்கத்து மரப்பல கையில் ஜீவனிருந்து கொண்டி ருந்தான். எந்த மாற்றமும் இல்லை. இரண்டு பேருமே ஒரேயடியாய் அசைந்தார்கள். சாய்...என்ன வெய்யில்.

'மாறண்ணை வாங்கோ' நீதன் எப்படி காச்சல் சுகமே!'

"எல்லாம் சுகம் எப்படிப் போச்சுது பிரச்சினையொண்டும் இல்லையோ"

'பெரிசா ஒண்டுமில்லை' பிரபா சொன்னான். கொட்டிலைத் தாண்டி மணல் வெளியை வெறித்துக்கொண்டிருந்தான் ஜீவன்.

'அண்ணை சாப்பாட்டுக்கு பிள்ளையளை வரச் சொன்னாங்கள் வருகினம்' பிரபா எழுந்து போய் நீல நிற பிளாஸ்ரிக் வாளியைத் தூக்கி வந்தான்.

சுடர் விழியோடு மூன்று பேர் வந்துகொண்டிருந்தனர். அவளுக்குப் பின்னால் வந்த ஒரு த்தி தலையிலிருந்த தொப்பியைக் கழட்டி காற்றை விசுக்கிக் கொண்டு வந்தாள். என்ன வெய்யில். காகமும் பறக்காத காலம்.

'மாறண்ணை எப்பவந்த னீங்கள்' ஆர்வம் மேலிடக் கேட்டாள் சுடர்விழி.

'இப்பதான் எப்பிடிச் சுகம்'

'ஏன் பேப்பர் பாக்கேல் லையோ மாறண்ணை' சுடர்விழிக்கு குரல் தழுதழுத்தது. அண்ணார்ந்து கொட்டிலைப்பார்த்த மாறனுக்கு தலை விர்றெண்டிருந்தது.

வேந்தினி, அகத்தமிழ்....

"இவையள்தான் அவையள் ளுக்குப் பதிலாய் இப்ப வந்திருக் கினம். சுடர்விழி பட்டென்று சொன் னாள், அவள் எதிலிருந்தோ நழுவு வது போலப்பட்டது.

'சாப்பாடு வந்திட்டுதோ பிரபாண்ணை' மற்றொருத்தியின் குரல் பட்டென்று வந்தது.

'ஓம் வந்திட்டுது'

சாப்பாட்டை எடுத்துக் கொண்டு மணல் வெளியில் அவர்கள் இறங்கி நடந்தனர். ஒரு கிழமைக்குள் மையின்ஸ் கிளியர் பண்ண வேணும் யாழ்ப்பாணம் - கண்டி வீதி திறக்க.

'பிரபா ஜீவனைக் கொண்டு போய் புதுக்காட்டுச் சந்தியில இருக்கிற பேசில விடுங்கோ. ஜீவன் பிரச்சினையில்லத்தானே'

ஜீவனுடன் முகத்தில் மூன்று நாள் மழிக்கப்படாத தாடியி ருந்தது. அவனை நிமிர்ந்து பார்த்த போது அவன் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தான்.

சாப்பாட்டுப் பார்சலை விரி த்தபோதும் சாப்பாடு உள்ளே யிறங்க மறுத்தது சங்கிலித் தொடர் போல ஏதேதோ நினைவுகள்.

ஜீவனுடன் பிரபாவும் வெளியே போய்விட்டான். மெயின் கொட்டில் வெறுமையாயிருந்தது. ஒரே அசதியாயிருந்தது. மூன்று மணித்தியால மோட்டார்சைக் கிலோட்டம் விலா எலும்பு வலித்தது. தலைவேறு விறுவிறு எண்டிருந்தது. அருகிலிருந்த செற்மேசையில் தலையைச் சாய்த்துக் கொண்டேன். காற்று எங்கிருந்தோ இந்த வெய்யி லிலும் இதமாய் வந்தது. பாலை மரத்தில் இரண்டு காகங்கள் சோம்பி வழிந்தது.

திடீரென்று அந்தப் பகு தியை தூக்கிவைத்தது போலி ருந்தது ஓசை. மேசையிலிருந்த தண்ணீர் போத்தல் கிழே உறுண்டு விழுந்தது.

திகைத்துப் போன மாறன் யு9க்கு குறுக்காக பளைச்சந்திக்கு தெற்கே ஓடிக்கொண்டிருந்தான். வோக்கியில் எந்தச் செய்தியும் இல்லை. காற்று அமுங்கிப் போய் எந்தவித சலனமுமில்லாதிருந்தது. ஒரு புகைமண்டலம் அந்தப் பெரிய வெளியை நிரப்பியிருந்தது. அது மெதுமெதுவாக சற்று மேலேறிக் கொண்டிருந்தது.


கால்கள் சோரச் சோர ஓடிப்போனபோது பாரிய குழி. அதற்கருகில் எவருமேயில்லை சுற்றிவர தேடத்தொடங்கியபோது இரண்டு போராளிப் பெண் பிள்ளை கள் கொஞ்சத்தூரத்துக்கப்பால் கண்ணெல்லாம் தூசுபடர்ந்து உடல் முழுதும் காயமுமாய் தூக்கியெறி யப்பட்டுக் கிடந்தனர்.

மையின்ஸ் வெடித்த மரு ந்துமணம் வயித்தைக்குமட்டி வாந்திவரும் போல இருந்தது. திடீ ரென்று சுடர்விழி எங்கேயென்றது மனம்?

கால்கள் பின்ன நிமிர்ந்த போது வானம் முழுக்க கலைந்து போன புகையைத் தாண்டி எங்கும் ஒரே காகங்கள். எதையோ தேடிப் பறந்து கொண்டிருந்தன. எங்கிருந்து வந்தது இத்தனைகாகங்கள்? நெஞ்சம் உறைய தலையை இறுக் கப்பிடித்தபடி நிலத்தில் குந்தினேன். தலை சுற்றியது.

அகன்ற கண்களோடு அந்த வெளியெங்கும் 'அண்ணா தண்ணி விடாய்க்குது' என்றாள் சுடர் விழி.

---



# பௌர்ணமி நிகழ்வு

வேளை தவறாமல்
போயாக்கள் வரும்.
பௌர்ணமி முட்டை வானில் உடையும்.
பாதி உயிர் ஏறிய
பரிதாப வெண்புறாக்குஞ்சு
உடல் சிதறி தன்
உதிரம் தெறிக்கப் போவது தெரியாமல்
உறங்கிக் கொள்ளும்.
உயிரின் கயிறு உணர்வை நெரிக்க
செரிக்க முடியாத சோகத்தில்
அது வெண்புறாப் பேடு
வியர்த்த சிறகுகளுடன்
புத்தரைத் தேடியபடி..
அரச மரங்களில்
தொடர்கிறது சர சரப்பு.
வேளை தவறாமல்
போயாக்கள் வரும்,
பௌர்ணமி முட்டை வானில் உடையும்,
பாதி உயிர் ஏறிய
பரிதாப வெண்புறாக்குஞ்சின் உதிரம்
வெள்ளரசுகளில் பட்டுத் தெறித்து
இலை வழி சொட்டும்.
மழித்த தலைகள் பரவசமடையும்
முத்தி நிலையில் தம்மை மறப்பர்.
துய்யொளி கொழிக்கும்
தூய மனங்களில்
புத்தர் ஓடி ஒளிந்து கொள்வான்.
வேளை தவறாமல்
வந்து போகும் போயாக்கள்.
அதோ! மழித்த தலைகள்
அவை கவிழ்ந்து கிடக்கும் பாத்திரங்கள்.
உள்ளே
கவிழ்த்துப் போட்ட தத்துவம்
சுரந்து கொண்டேயிருக்கிறது வற்றாமல்.
அதோ!
'அட்சய பாத்திரம்'
புத்தர் சயனிக்கையில்
பிடுங்கி எடுத்து உதிரம் நிறைத்தனர்.
அள்ள அள்ள சுரந்து கொள்கிறது,
அளவு கெடாமல்.
என்ன தெளிவாய் எல்லாம்
பௌர்ணமி எனும் வெள்ளைத் தீயில்.

**யோ. ஞானஸ்கந்தன்**

# உன்னை நினைத்து

எனக்கு
வடிவாகத் தெரியும்.
உன்
இறுதிப் பொருகினை
காற்று மட்டுமே
கண்டிக்கும் என
வெற்றிச் செய்தி ஒன்று
செவிதனில் விடும்போதுதான்
அவன்தானா என்று
கண்ணுக்கெட்டதா தூரத்தில் நீ
கடமை முடித்திடுவாய்.
ஆனால்.... எத்தனை பேர்
இங்கே....
உன்னை நினைத்தபடி...


**-யோ. புரட்சி-**



# இளையநாதம்

## பாம்புப் பிள்ளை

ஒரு ஊரிலே கதிரேசன் செட்டியார் கல்யாணி என இருவர் இருந்தனர். இவர் களுக்கு குழந்தை இல்லை. அதை எண்ணி இவர்கள் வருத்தப்பட்டார்கள் ஒரு நாள் இவர்கள் வணங்கும் கடவுள், இவர்



கள் முன் தோன்றி உங்களுக்கு ஒரு பையன் பிறப்பான். ஆனால் அந்த பிள்ளை பாம்பாக பிறக்கும் என்று கூறி விட்டு மறைந் தார். இவர்கள் இருவருக் கும் சந்தோசம் ஒரு புறமும், அது பாம்பாக பிறக்கும் என்ற கவலை மறுபுறமும் இவர் களுக்கு இருந்து வந்தது. காலப்பொழுதில் இவர் களுக்கு குழந்தை பிறந்தது.

அது அந்த கடவுள் சொன்னது போலவே பாம் பாக பிறந்தது. இருந்தாலும் இவர்கள் அதை வளர்த்து வந்தார்கள். அந்த பாம்புப் பிள்ளை இவர்களிடம் கதைத்தது. ஒரு நாள் காலையில் அந்த பாம்புப் பிள்ளையின் அறைக்குள் கதிரேசன் செட்டியார் சென்றார். என்ன ஆச்சரியம் ஒரு அழகான பையன் இருப்பதைக் கண்டார். என் பிள்ளையின் அறைக்குள் நீ எப்படி வந்தாய். யார் நீ என்று கேட்டார். பாம்பாக இருந்த பிள்ளை நான் தான் உங்கள் பிள்ளை என்று கூறிணான் நான் நம்ப மாட் டேன். என்று கூறி னார். கொஞ்சம் தாமதி யுங்கள். என்று கூறிவிட்டு ஒரு பெட்டியினுள் நுழைந்து மீண்டும் பாம்புப் பிள்ளையாக மாறி வெளியே வந்தான். அப்பொழுது தான் இவன் தன் பையன் தான் என்பதை உணர்ந்த கதிரேசன் செட்டியார் மீண்டும் மனித உருவம் எடுக்கச் சொன்னார். இதைச் செவிமடுத்த பாம்புப் பிள்ளை மீண்டும் மனித உருவம் எடுத்தான்.

**ம.அறபாத்**

## வாரம் ஒரு குறள்



மானுடர்கள் யாவருமே வாய்மையு டன் வாழ வேண்டும். அதாவது உண்மை யையே என்றும் பேச வேண்டும். நாம் தவறியும் கூடப்பொய்பேசலாகாது.

நாம் பொய்யையே பேசி நல்ல தர்மங்கள் [illegible] செய்தாலும் கூட ஒரு பயனும் இல்லை. ஆனால் நாம் என்றும் உண்மையேபேசி வாழ்வோமாக இருந்தால் நாம் பிறருக்குச் செய்கின்ற தர்மம்கூட செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

இதனையே தான் வள்ளுவப் பெருந்தொகை வாய்மை என்ற அதிகாரத்தில் ஏழாவது குறளில் அதாவது

**"பொய்யாமை பொய்யாமை**
**- ஆற்றின்அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று"**

என்று கூறியுள்ளார். இதன்படி நாமும் வாழ்மையின் வழிவாழ்ந்து உலகில் உயர்வடைவோமாக.

## சமாதான ஆண்டே



ஏர் பிடிக்கும் உழவனின்றி
போர் செய்யும் மன்னன் எங்கே
அவரே சமாதானப் புறாவோடு
கொடி பிடித்து வருவது
புதுயுகம் படைக்கும்
புத்தாண்டை வரவேற்க.

**இ.ராஜ்குமார்,**
**மு/புதுக்குடியிருப்பு.ம.வி**

## அறிந்து கொள்ளுங்கள்

01) புக்காரா விமானத்தை தயாரித்த நாடு எது?
ஆஜென்டீனா
02) மிக் 27,MI24 விமானத்தைத் தயாரித்த நாடு எது?
ரஷ்யா
03) F7,Y12 என்பவற்றை தயாரித்த நாடு எது?
சீனா
04) கிபிர் U.A.V.(றோன்) என்பவற்றைத் தயாரித்த நாடு எது?
ஸ்ரேல்
05) உலகில் மிகப் பெரிய விமானப் போக்குவரத்து நிறுவனம் எது?
ஏரோப் புளொட் (Aero Flot)
06) உலகிலேயே மிக நீளமான நதி எது? நீளம் எத்தனை Km?
அமேசன் நதி 6750Km
07) உலகிலேயே ஏரிகள் நிறைந்த நாடு எது?
பின்லாந்து 10,000க்கு மேற்பட்ட ஏரிகள்

**த.ஈழமலர்**

## நகைச்சுவை



### பாடசாலை வகுப்பறையில்

ஆசிரியர் :- டேய் பெரிய புராணத்தை எழுதியவர் யார்?
மாணவன் :- சத்தியமாய் நான் எழுத வில்லை சேர்.
ஆசிரியர் :- உனது அப்பா வைக் கூட்டிவா;
உமது மகன் பெரிய புராணத்தை தான் எழுத வில்லை என்கிறான்.
தந்தை :- ஐயோ வாத்தியார் இவன்தான் மதில் சிவர் முழுக்க எழுதிரவன் இதை யும் இவன்தான் எழுதியிருப்பான்.
ஆசிரியர் :- ...?


**செல்வன்**

## ஓவியத்துக்குள் ஓவியம்...



பூ. நிறஞ்சன்,
மு/புதுக்குடியிருப்பு.ம.வி.

## கைவண்ணம்



ரகு,
**கனகபுரம் ம.வி.**
**கிளிநொச்சி.**

## குறுக்கெழுத்துப் போட்டி 20

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | 06 |
| 07 | | | | 11 | |
| | | 15 | | | |
| 19 | | | | 23 | |
| 25 | | 27 | | | |
| | 32 | | | | |

### இடமிருந்து வலம்

01. சூரியன்.
07. சிறியதாக இருந்தாலும் காரம் கூடியது குழம்பியுள்ளது.
11. சந்திரன்.
15. நவம்பர் 27ல் நினைவு கூரப்படுபவர்கள்.
19. இளைய சகோதரன்.
23. வனம் தலைகீழாக உள்ளது.
27. அரசன் தலைகீழாக உள்ளது.
32.. சண்டைக்கு எதிரானவை.

### மேலிருந்து கீழ்

01. வீட்டு மிருகங்களில் இதுவும் ஒன்று.
02. எரிதல்.
06. பிரசித்தி பெற்ற முருகன் ஆலயம்.
25. பிழைக்கு எதிரானவை.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.18இன் விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. அரசன். | 01. அவமானம். |
| 07. வலை. | 06. புலி. |
| 10. அல்லி. | 10. அதிசயம். |
| 14. சித்திரை | 14. சிங்கம் |
| 20. சங்கீதம். | 15. சத்தம். |
| | 23. கீரி |
| | 24. தவம் |

**குறுக்கெழுத்துப்போட்டி இல.18 இன் பரிசுக்குரியவர்**
**க.சுதாகரன்,**
**தரம் -5,**
**கிளி/கண்டாவளை.ம.வி.**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.18 இன் பாராட்டுக்குரியவர்கள்.**

ஜே.அமலதாஸ், தரம் -7, C.C.T.M.S,வவுனியா.

ச.சண்சயன்,தரம் -7A, மு/யோகபுரம்.ம.வி,

இ.மதன், ஆண்டு -8B, கிளி/மத்தியகல்லூரி,

தி.சுதர்ஜினி, கிளி/தருமபுரம் ம.வி,

ஏ.அனுசியா, திருகோணமலை.

கி. சரிதா, தரம் -10, கொக்கிளாய்.அ.த.க. புதுக்குடியிருப்பு.

இளையவர்களே! மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.20
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## இலக்கத்தைச் சேர்த்து சொல்லைக் கண்டுபிடியுங்கள்

| 01 | 02 | 03 | 04 | 05 |
|---|---|---|---|---|
| ச | மா | தா | ன | ம் |

01. இதனை செய்தால் புண்ணியம் என்பார்
3,4,5
02. தாயின் மறு பெயர்
2,3
03. நான்கு கிழமைகள் ஒன்றாதல்
2,1,5
04. எங்களை குறிப்பது
3,5
05. மக்களை குறிப்பது
1,4,5
06. இதை இழந்தால் திரும்ப பெறமுடியாது
2,4,5
07. ஈராக்கின் அதிபர்
1,3,5
08. பாலர் கூடி வைப்பது.
1,2

R..டிலைக்சன்

## பூமியில்

*பூமியில் எலிவளையானாலும் தனிவளை*
*வேண்டும்.*
*சிறியதாயகமானாலும் தனித்தமிழ்த்*
*தாயக பூமி வேண்டும்.*
*மீனுக்கோகடலுண்டு எலிக்கோ வளையுண்டு*
*பூமியில்*
*பறவைக்கோ கூடு உண்டு பூமியில்*
*மிருகத்திற்கோ காடு உண்டு பூமியில்*
*கறையானுக்கோ புற்றுண்டு பூமியில்*
*கிளிக்கோ மர பொந்துண்டு பூமியில்*
*தேனீக்களுக்கோ வதையுண்டு பூமியில்*
*சிங்கத்திற்கோ குகையுண்டு பூமியில்*
*மரத்துக்கோ நிலமுண்டு பூமியில்*
*பூமியில் ஈழத்தமிழருக்கோ என்ன உண்டு*
*எலிவளையானாலும் தனிவளை வேண்டும்*
*சிறியதாயகமானாலும் தனித்தமிழ் தாயக*
*பூமி வேண்டும் உலகில்.*

மு.ரகுபாலன்.

சிறந்த சாதனைகள் பெரும்பாலும் இளமையின் சாதனைகளே. - பெஞ் சமின்

குழந்தை உளவியல்



# குழந்தைப்பருவம் அபூர்வ ஆற்றல் கொண்டது

"இளமையிலே கல்வி சிலையில் எழுத்து'' நம் முன்னோர்கள் எத்தனையோ வருடங்களுக்கு முன் உதிர்த்த முதுமொழியுடனேயே இக்கட்டுரையை ஆரம்பித்தல் பொருத்தமாக அமையும். குழந்தைகளின் "விவேகம்" "புரிந்து கொள்ளும் ஆற்றல்'' பற்றியதான ஒரு வெளிப்பாடாகவே இக்கட்டுரை அமைகின்றது.

இன்று, புலம் பெயர்ந்து வாழுகின்ற எம் பெற்றோர்கள் உள்ளிட்ட அநேகமான பெற்றோர்கள் குழந்தைகள் பற்றிய பல்வேறு விடயங்களை புரியாதவர்களாகவே காணப்படுவதையும் நாம் பார்க்கிறோம். உங்கள் பிள்ளைக்கு ஏன் நீங்கள் தமிழ் கற்றுக்கொடுக்கவில்லை எனக் கேட்டால், அவர்களிடம் இரு ந்து சர்வ சாதாரணமாக வருகின்ற பதில், "எனது பிள்ளை பிரேஞ்சு படிக்கிறது; (அல்லது அவர்கள் வாழும் நாட்டுமொழியைக் குறிப்பிட்டு) தமிழையும் படித்தால் அதற்கு குழப்பமாக இருக்கும் என்பதுதான்''. ஆனால், எவ்வளவோ விடயங்களை கற்றுத் தெளியக்கூடிய சிறு பிள்ளைப் பராயத்தை பலர் புரிந்து கொள்ளாமல் வீணடிக்கச் செய்து விடுகின்றனர்.

பிள்ளைகளின் விவேகமானது அதன் பிறப்பிலேயே அமைந்து விடுகின்றது என நிலவி வந்த கருத்துக்கள் ஆய்வாளர்களால் எப்போதோ முறியடிக் கப்பட்டு விட்டது. குழந்தைகளின் விவேகத்தை அதன் சிறுபருவத்திலேயே அதிகரிக்கச் செய்ய முடியும் என்றும். அதன் பெருமளவிலான பங்கு பெற்றோர் களையே சாரும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள்.

இதன் உள்ளடக்கத்தையே "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என பல வருடங்களுக்கு முன்பே 'விளையும் பயிரை முளையில் தெரியும்' என்று, கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகளில் காண்கின்றோம். இதே போலவே நமது மூதாதையர்களும் சில பழமொழிகள் மூலம் இந்த உண்மைத் தத்துவத்தைச் செப்பியிருக்கின்றனர். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? ''தொட்டிலில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என பலவாறாக குழந்தைப் பருவத்தின் முக்கியத்துவத்தை நம் முன்னோர்கள் இனங்கண்டுள்ளனர். இதனையே இன்று பலஆராய்ச்சியாளர்களும், பல வருடங்களுக்குப்பின்னர் நிறுவியிருக்கின்றனர்.

ஒரு குழந்தை தனது 5 வயதுக்குள் காண்பது, கேட்பது, கற்பது ஆகியவற்றின் மூலம் அடைகின்ற விவேக அளவிற்கு அமையவே அதன் பிற்கால விவேக முயற்சியும் அமைந்து காணப்படும் என்பது உளவியலாளர்களின் முடிவாகும். அத்துடன் இந்த இளம்பருவத்தில் அவர்களுடைய விவேக ஆற்றலும், வளர்ச்சித் தன்மையும்மிகவும் அதிர்ச்சியூட்டும் வகையிலே அமைந்து காணப் படும் என்பதும் கவனத்திற்குரிய விடயமாகும். இது பற்றி பென்சமிங் எங்புளும் என்ற கல்வி உளவியலாளர் குறிப்பிடுகையில் "4,5 வயதிலேயே ஒரு குழந்தை பெறும் விவேக அடைவு, அதன் பின்னைய வயதில் பெறும் விவேக அடைவின் அரைவாசியாகும்." எனக் குறிப்பிட்டுள்ளார். ஆயிரம் குழந்தைகளை ஆராய்ச்சிக்கு உட்படுத்தி இந்த முடிவினை எடுத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

**கா.சங்கீதா**

ஜின் பியாஜே என்ற இன்னொரு கல்வி உளவியலாளர் குறிப்பிடுகையில், தொட்டிலில் கிடத்தப்பட்டிருந்த தனது ஆறு மாதக் குழந்தை அங்கு கட்டியிருந்த மணிகட்டிய பொம்மை ஒன்றை தற்செயலாக காலால் உதைத்த போது, ஏற்பட்ட சத்தத்தைக் கேட்டு சிரித்து தன் மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தியது. பின்னர் தான் விரும்பிய போதெல்லாம் காலால் பொம்மையைத் தட்டி எழும் நாதத்தை விருப்புடன் செவிமடுத்தது என ஜின் பியாஜே கூறுகிறார்.

குழந்தைகளின் சூழல் நிறையப் பொருட்களைக் கொண்டதாகவும், புதிய புதிய விதம் விதமான பொருட்கள் பல்வேறு நிறமுடைய பொம்மைகள் என அமையுமானால் அதன் அவதானிப்புச் சக்தியும், விவேகமும் கூடுவதற்கு ஏதுவாகின்றது எனலாம். அத்துடன் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் கணிசமான நேரத்தை ஒதுக்கி குழந்தைகளின் விவேகத்தைஅதிகரிக்ககூடிய முயற்சியில் ஈடுபடவேண்டும்.

சிறு பராய அறிவாற்றல் பற்றிய சில சுவாரசியமான விடயங்க ளையும் நாம் இங்கு கவனிக்க முடியும். பிரித்தானியாவில், லுலூகேஸ் கிப்சன் என்ற ஏழு வயது பெண் குழந்தையின் தாய், தன் குழந்தையின் அறிவு விவேகத்திற்கு ஈடுகொடுத்துப் படிப்பிக்க அரச பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லை என நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந் துள்ளார். சிறுமி லுலூ இசைப் படப்பாடல், வயலின் வாசித்தல், வேகமாக கல்வி கற்றல்என பல்துறைகளிலும் மிகச்சிறப்பாக விளங்கினாள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே போன்றே மலேசியாவில் இருக்கும் ஐந்து வயதான சமீர் கரீத், ஆங்கிலம், மலே இரு மொழிகளையும் சரளமாக பேசுகிறான், பியானோ திறமையாக வாசிக்கிறான், சித்திரம் வரைகிறான், கணனியில் அவனது பிஞ்சுக்கரங்கள் சர்வ சாதாரணமாக தவழ்கிறது. இன்னும் விளையாட்டுத்துறையிலும் ஆர்வத்தோடு ஈடுபடுகிறான்.

அத்துடன், இந்தியாவில் 7வயதுக்குள் ஐயாயிருத்திற்கு மேற்பட்ட புகைப்படங்களை எடுத்து, படப்பிடிப்பாளராக மிளிருகிறாள் ஸ்ரஸ்தி ஜெயின். இதேபோல் நம்மில் பலருக்கும் நன்கு அறிமுகமான குழந்தை நட்சத்திரம் ஷாலினி. இரண்டு வயதில் நடிக்கத் தொடங்கி தனது நாலாவது வயதில், குழந்தை நட்சத்திரத்திற்கான தேசிய விருதினைப் பெற்றாள்.

இன்னொரு தமிழகச் சிறுமி ஆதிரை. ராமாயண மேதை எனப் போற்றப்படுகிறாள். தனது ஐந்தாவது வயதிலேயே கம்பராமாயணம் முழுவதையும் வரி தவறாமல் ஒப்புவிக்கிறாள். அதற்கான விளக்கத்தினையும் தருகிறாள்.

சிங்கப்பூரிலே சில பாடசாலைகளில், 1½ வயதிலேயே குழந்தைகளைப் பாடசாலைகளில் சேர்க்க வேண்டும். குழந்தைகளோடு விளையாட, அவர்களோடு உறவாட நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அங்கே இருக்கிறார்கள். அந்த ஆசிரியர்கள் குழந்தைகளோடு கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவார்கள். பாட்டுப்பாடிக் காட்டுவார்கள். அணில், முயல், யானை போல் நடித்துக் காட்டுவார்கள்.

ஜப்பானில் "கூமோன்" என்ற கல்லூரி இருக்கிறது. டோக்கியோவில் தலைமைக் கல்லூரியைக் கொண்டிருக்கும் இது நாடெங்கும் 20,000 வகுப்பறைகளை கொண்டுள்ளன. விசித்திரம் என்னவென்றால் இங்கே குழந்தைகள் தாங்களாகவே கற்றுக் கொள்கிறார்கள். முதல் மூன்று வருடங்கள் இங்கே படிக்கிற பிள்ளைகள் பின் ஜப்பானிய கல்லூரிகளை கலக்குகிறார்கள்.

இப்படியாக உலகெங்கும் அபார சக்தியுடனும், விவேகத்துடன், சிறிசுகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே ஒரு மனிதனின், ஆளுமை, அறிவு, விவேகம், என்பதெல்லாம் அவனது குழந்தைப் பருவத்திலேயே தீர்மானிக்கப்படுகிறது எனலாம்.

ஒரு குழந்தை மிக அதிகமான விடயங்களை உள்வாங்கக்கூடிய ஆற்றலை இளமையிலேயே பெற்றிருக்கிறது என்பதைப் பெற்றோர்கள் நன்கு உணாந்து கொள்ளவேண்டும். பெற்றோ ராகிய நீங்கள், உங்கள் குழந்தைகள் பேசுவதற்கும், அவதானிப்பதற்கும் தூண்டுதலை முதலில் ஏற்படுத்த வேண்டும். அத்துடன் வாசிப்பதற்கான ஆயத்தங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். நீங்கள் குழந்தைகளுடன் உரையாடும் போது, நல்ல வாக்கியங்களை பயன்படுத்துவது அவசியமாகும். மழலைக்குழந்தைக்கு செழுமையான மொழிகளை பேசுவதன் மூலமே அவர்களின் மொழித் திறனை வளர்க்கமுடியும். எவற்றைப் பற்றியாவது விளக்கம் கொடுக்கும் போது அங்க அசைவுகளுடன் கூடிய நடிப்புடன் சிறப்பாக கற்றுக்கொடுக்கவேண்டும். சமுதாயத்தின் எதிர்காலச் சிற்பிகளாக அமையும் குழந்தைகளின் அத்திவாரத்தை நன்கு அமைக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும். குழந்தைகளின் மூளை பதிவுச் சக்தியானது உங்களை விட ஆற்றல் கூடியது என்பதனை பெற்றோர்களாகிய நீங்கள் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

புகலிட மண்ணிலே இவ்விட வாழ்தல் சூழ்நிலையின் விளைவாக பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடையிலுள்ள பிணைப்பு குறைவாகவே காணப்படுகின்றது. இவை மாற்றமடைய வேண்டும். உங்கள் குழந்தைகளின் எதிர்கால சுபீட்சத்திற்காக கணிசமான நேரத்தை பிள்ளைகளின் வேகத்தை அதிகரிக்கச் செய்ய நீங்கள் பயன்படுத்த வேண்டியது அவசியமானதாகும். தந்தையும் தாயுமேபிள்ளைகளின் ஆரம்பகால ஆசிரியர்கள். இவர்கள் தமது கடமையிலிருந்து தவறினால், இவர்களின் எதிர் காலச் சந்ததி பாதிப்படையும் என்று உளவியலாளர்கள் மிகவும் தெளிவாக வலியுறுத்தி உள்ளனர்.



# உதவியும் உபத்திரமும்

A-9 பாதை திறந்தவேளை. யாழ்ப்பாணத்துக்கு சென்று தான் பிறந்த மண்ணையும் உறவினர்களையும் பார்த்துவிட்டு சந்தோசத்துடன் வன்னிக்கு தனது இருப்பிடமான மல்லாவி நோக்கி திரும்பிக்கொண்டிருந்தான் காந்தன்.


சோதனைச்சாவடிகளின் சோதனைகளை வென்று தனது இல்லாளுடன் இனிய மகனுடனும் மோட்டார் சைக்கிளில் பளைச் சந்தியையும் தாண்டி வந்து கொண்டிருந்தவேளை வீதி ஓரத்தில் நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒருவர் கை நீட்டிக் காந்தனை மறித்தார். வேகத்தைக் குறைத்து நிறுத்தி கேள்விக் குறியுடன் அவரை நோக்கினான்.

''மோட்டார் சைக்கிள் காற்றுப்போய்விட்டது. அவசரமாக யாழ்ப்பாணம் செல்ல வேண்டும். சில்லைக்கழற்றினால் எடுத்துச் சென்று ஒட்டலாம். சாவி இருந்தால் தரமுடியுமா?" அவசரமாக ஆனால்கெஞ்சலாக கேட்டார். அப்போது தான் அவர் அருகில் நின்ற மோட்டார் சைக்கிளை காந்தன் கவனித்தான். பின் சில்லு காற்றுப்போய் இருந்தது. உடனே காந்தன் தனது மோட்டார் சைக்கிளின் சாவிப் பெட்டியைத் திறந்து சாவிகளை வெளியில் எடுத்து சில்லைக்கழற்றிக் கொடுத்தான். மூட்டைக்கணக்காக காந்தன் மீது 'நன்றி' சுமையைச் சுமத்தினார் அந்த ஒருவர். காந்தனும் நன்றிச்சுமைகளுடன் திரும்பவும் பெட்டியினுள் வைத்துப்பூட்டி விட்டு தனது மனையாளையும் மகனையும் ஏற்றிக்கொண்டு மல்லாவி நோக்கி விரைந்தான்.

காந்தன் வந்து வீடு சேரும் போது நேரம் பிற்பகல் 5.30 மணி சற்று நேரம் களைப்பாறிய பின்னர் கடைக்குப்போய் வருவதற்காக தனது மோட்டார் சைக்கிளை எடுத்த காந்தன் முன் சில்லு காற்றுப்போய் இருப்பதைக்கண்டு சில்லைக் கழற்றுவதற்காக பெட்டியினுள் இருந்த சாவிகளை எடுத்தபோது அவனது கண்ணில் தட்டுப்பட்ட 'ஒன்று' அவனை திகைப்புள்ளாக்கியது. திகைத்து நின்ற அவனை 'என்ன விசயம் அப்பா கல்லாட்டம் நிற்கிறியள் என்ன நடந்தது" என அவனது இல்லாள் கேட்டது சுய உணர்வு பெறச் செய்தது.

''உதவி செய்யப்போய் உபத்திரம் கொடுத்து விட்டேனப்பா "என்று சொல்லிய படி வழியில் 'அந்த ஒருவரின்' மோட்டார் சைக்கிளில் கழற்றிக் கொடுத்த சில்லுக்குரிய அச்சும் நட்டுகளையும் எடுத்துக்காட்டினார். அவனது கையில் இருந்த அச்சும் நட்டுகளும் அவனைப் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டு அந்த ஒருவரின் நன்றிச் சுமைகளின் பாரம் தாங்க முடியாமல் இருந்தது காந்தனுக்கு.

**கதிர்**



# சோம்பல் சுகமானது

தமிழ்க்கவி

மெய்யோடா தம்பி... உந்தச் சீமெந்து கிடந்து கல்லுப்பத்துதடா வீடு கட்ட நாள் பாக்கமுதல் உதைக் கல்லாய் அரிஞ்சு வையன் பழுதாய் போகாம கிடக்குந்தானே. "செல்லாச்சி புறுபுறுக்கத் தொடங்கீற்றா..."

"நானென்ணணை செய்ய ஆக்கள் கிடைச்சாயெல்லோ நேற்றும் விடிய வாறண்டாங்கள் இன்னுங்காணேல்ல."

"ம்.. சும்மா கிடந்த சங்க ஊதிக் கெடுத்தானாம் ஆண்டியெண்டு பாதையத் திறந்து விட்டு சாமானுகளையும் கொண்டு வந்து போட்டாச்சு ஆரைப்பாத்தாலும் சீமெந்து, மரந்தடி, தகரஞ் சீற்று எண்டு வீடுகட்டுறவையாத்தான் கிடக்கு. பின்ன இந்த வீடு கட்ட வீடு போட எண்டு அந்தத் தொழில் செய்யிற மேசன் மாரையோ தச்சர் மாரையோ எங்க போய் பிடிக்கிற. இதுதான் பாருங்கோ. நாங்கள் இருவத்தைஞ்சு வரியமா வீடுகள் இடிஞ்சதைக் கண்டோமேயல்லாமல் வீடுகள் கட்டினவையக் காணேல்ல. எங்கட நாட்டின்ர உழைப்பாளிகள்- இப்ப இந்த நாட்டைக்கட்டி யெழுப்ப வேண்டிய இளந்தாரிகள் எங்க ,போரில நிண்டு வெண்டவய வீரச்சாவடைஞ்சவயத்தான் நாங்கள் கண்டது. ஆனா இப்ப இடிஞ்சு போய்க் கிடக்கிற எங்கட நாட்டைக் கட்டியெழுப்ப ஆர்வாற-

நாங்கள் இதைப்பற்றி நல்லா மறந்து போனம். ஓ.. எங்கட ஊருக்க இருந்த தச்சு வேலுப்பிள்ளையர் எவ்வளவு கெட்டிக்காறன். வீடு மூட்டவோ. கதிரை மேசை செய்யவோ... ஏன் எங்கட பூட்டி வீட்ட கிடக்குற பெட்டகமீறா. அந்தாளின்ர தேப்பன் தானே செய்தது. வேலுப்பிள்ளையர் இந்தத் தொழில்ல கொஞ்சமே உழைச்சவர். ஆனா தன்ர மக்கள் மூண்டு பேரையும் வள்ளிசாப் படிப்பிச்சு வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டுது. அவங்கள் அங்கயும் தச்சு வேலையோ தெரியா.

உப்பிடித் தான் பாருங்கோ. எங்கட மேசன் நாகமணியர், தான் உழைச்சு பெடியள வெளியால அனுப்பிப் போட்டு இப்ப தானும் தொழில் செய்யாம அங்கயிருந்து வாற மணியோடரில காலங் கொண்டு போறார் கனக்க என்னத்துக்கு.

முன்னை விசுவமடு, மல்லாவி வவுனிக்குளம். எண்டு மிளகாய்ச் செய்கைக்கு காணியள் குடுத்தவை. அந்த நாளயில அதில மிளகாய் செய்தவை. மிளகாயக் கட்டிக் கொண்டு கொழும்புக்குப் போய்.... அங்கயிருந்து மிளகாய்க் காசில ரைக்ரரும் ரைக்ரர் பெட்டியுங் கொண்டு திரும்பி வந்தவை. இப்பயும் ஒருக்கா மல்லாவிப்பக்கம் போய்ப்பாருங்கோவன். மல்லாவிக்குப்போனா உள்ளாவியும் போயிடும் அப்பிடியிருக்கு. தோட்டமோ, துரவோ, மாடோ கண்டோ எல்லாம் போச்சு. போன தலைமுறை சொந்த மண்ணில உழைச்சதுகள் இந்தத் தலைமுறை எங்கயோ அந்நிய தேசத்தில உழைக்குதுகள்.

எங்கட மண்ணில வேலைக்கு ஆளில்ல. என்னவோ சொல்லுவினமே "சோறில்லாத்துக்கம் சொன்னாலும் தீராது ஆளில்லாத்துக்கம் அழுதாலும் தீராது." எண்டு. என்னவோ போங்கோ நாடு நாடு எண்டு ஏன் சொல்லுறது நாடெண்டு சொன்னா மற்றவை எதுக்கும் நாடி வரவேணும். நாங்கள் எதுக்கும் மற்றவைய எப்ப நாடாத்திருக்கிறமோ அப்பதான் இது நாடு.

இதென்னண்ட எங்களுக் கெண்டொரு நாடில்ல. வெளிநாடுகள நாடிப்போயிற்றினம். இப்ப எங்கட மண்ணில வேலை செய்ய ஆளில்ல. காலமயிருந்து நானும் கணக்குப்பாக்கிறன். தின்னிற அரிசியத் தேங்காய விட மற்றதெல்லாம் இரவல்.

காலத்தால எழும்பி கேத்தில அடுப்பில வச்சிட்டு பல்லுத்தீட்ட விறசெடுத்தா கொழும்பு, பற்பசை கொழும்பு, அவிக்கிற புட்டு கோதுமை, இடிக்கிற சம்பலுக்கு-மட்டும்தான் நாங்கள். அங்கால காலுக்கு செருப்பு, மேலுக்கு உடுப்பு. இருக்கிற கதிரை தண்ணியள்ள வாளி, சமைக்கிற சட்டி, தட்டிவைக்கிற நெருப்பெட்டி சரக்குச் சாமான் போட்டு வைக்கிற செப்புகள், தேங்காநெய், மண்நெய் படுக்கிறபாய், எழுதிற தாள், பேனை, இழுக்கிற சீப்பு முகம் பாக்க கண்ணாடி தோளில தொங்கிற பை வாசிக்கிற புத்தகம் ஏன் குடிக்கிற தண்ணி எல்லாம். எல்லாம் கொழும்பால வருது இதை வாங்கிற காசு வெளியில இருந்து மணியோடரில வருது.

சும்மாவே சொல்லுறன் கிளிநொச்சியில ஒரு கடையில பளபளளெண்டு ஏதோ தும்பு மாதிரி திறம் பொலித்தீனில முடி விக்குது. 'கிளீனர்' எண்டு தான் பேர். என்னண்டு கடைக்காரறிட்ட கேட்டன். பாத்திரம் விளக்கிற தும்பாம் 'அடி செருப்பால....' எங்கத்தயான்? மேடின்சைனா இதோட ஒரு ஷாம்பு வாறது. அதில தொட்டு பாத்திரங்கள் கழுவ மினுங்கும்." எண்டு மேலதிக தகவலும் தாறார்.

எங்கட ஊர் பொச்சு மட்டையும் வைக்கல் தும்பும், பிசுக்கங்காய்த் தும்பும் எங்க போட்டுது. அதுகும் வெளி நாட்டுக்கே போகுது. இப்ப என்ன சொல்ல முதுகு தேய்க்க தும்பும் முதுகு சொறியக் கையுங்கூட, மேடின்சைனா...ம் வருது.

பிரம்பு நம்ம நாட்டில விளைஞ்சு நசிஞ்சு போகுது. ஆனவாகில அதை வெட்டித் தரமான பொருளுகளச் செய்ய இஞ்ச ஆளில்ல இதே பிரம்பில தென்னிலங்கை மக்கள் என்னென்ன பற்றனில கதிரையெண்டும்-- அலுமாரியள் தட்டுகள் எண்டும் செய்து ஏத்திப்பறிச்சு இஞ்ச கொணர்ந்து வித்துப் போறாங்கள். ங...மரத்தில செய்த கட்டிலும், ஏன் இவ்வளவு தும்புகள் பஞ்சுகள் எங்கட மண்ணில காத்தில போகுது. அங்கத்தியில் நைலோன் மெத்தையிலும் வயர்ப்பாயிலும் படுத்தெழும்பி நாரியுளையிது கைகால் அசதியாக்கிடக்கு. எண்டு நோயுஞ் சொல்லுவம் அதுக்கும் மருந்து எது? பனடோலும் அங்கிருந்துதான் வரவேணும்.

வேலைக்கேன் சனத்தை பாதைதிறந்து விட்டு வீதி போடுகினம். எத்தின பேருக்கு வேலை வாய்ப்பு. இல்ல நான் தெரியாமத்தான் கேக்கிறன். பாதை துறந்ததில லாவங் கண்டது ஆர்? வீட்டுக்கு வீடு கிணத்தடியில கமுகமரம் வைக்கிறது அந்த நாளையில. பாக்கு ஆயிறதும் உண்டு ஆனா இது குளிக்கிறவைக்கு முதுகுரஞ்ச பயன்கடுறதுதான் கூட. இப்ப முதுகுரங்சவும் சாமான் வருது. ரெண்டுபக்கம் கைபிடி வைச்சு மூண்டு நாலங்குலத்தில ஒரு பட்டி. 'இதில சோப்பைத்தடவி இப்பிடித் தேய்கிறது' எண்டு யாவாரி காட்டித்தாறான். எட ஊத்தையெல்லம் இதில நிக்கப் போகுதே எண்டா, அது அலம்பியலம்பிப் பாவிக்கலாமாம்.

அந்த நாளயில எங்கட அப்பாத்தை ஒரு விடுகதை சொல்லுவா நாங்கள் தூக்கியெறியிறது பணக்காரன் பொக்கற்றுக்க வைக்கிறது அது என்ன? விடை மூக்குச்சளி அவன் லேஞ்சியில துடைச்சு பொக்கறில வைப்பான். எண்டு சொல்லுவா. கக்கூசுகள் கட்டாத காலம். நாங்கள் காடுவழிய மலங்கழிப்பம். பணக்காறன் அதையுந்தான் அறை கட்டி மூடிவைக்கிறான் எண்டு சொல்லிச்சிரிப்பா. இப்பிடி அறியாமை நிரம்பியிருந்த காலம் அது எண்டு எண்ணாதையுங்கோ. அவயள் அறிஞ்சது அவ்வளவுதான் எண்டும் கொள்ளாதையுங்கோ. பனை வடலி ஓலையால நாக்கு வழிச்சு அதைக் கிடங்கில எறிஞ்சு போடுவினம் இப்ப நாக்கு வழிக்கவும் கொழும்பால சாமான் வருது கழுவிக்கழுவி வழிக்கிறம்.

எல்லாம் புதினமாத்தான் கிடக்கு சொந்த மண்ணை அந்நியனட்டயிருந்து மீட்க உயிர்குடுத்துப் போராடின நாங்கள். இப்ப எங்கட வாழ்வாதாரத்தை அந்த அந்நியனட்ட விட்டிட்டு நிக்கிறம். அந்நியப் பொருளுகளின்ர சந்தையா எங்கட மண்மாறுது. எங்களுக்கு தேவையான பொருளுகள் வாங்கிறத விட்டிட்டு இப்பவெல்லாம் எங்கட ஆடம்பரத்தையும் அந்தஸ்த்தையும் காட்டத்தான் பொருளுகள் வாங்கிறம். இந்த விற்பனை ஸ்தாபனங்களின்ர கெட்டித்தனத்துக்கு ஒண்டு சொல்லுறன் உதாரணந்தான். உண்மை.

முன்னை உந்தச்ஷாம்பு. வடிவான நெளிநெளிப் போத்தில்ல வரும். தண்ணிபட்டா... புசு புசெண்டு நுரைக்கும் ஆனா விற்பனை இல்லை. எங்கட சனம் இலுப்பையரைப்பும், தேசிக்காயும், சீயக்காயும் வெந்தயமும் தானே. புதுப்புதுப் சாமானுகள யோசிக்காமல் பயன் படுத்தி பிறகு உள்ள மயிரும் கொட்டுண்டு போம் எண்டு பயம் ஆனா இந்தப்பயத்தை ஷாம்பூ தயாரிப்பாளர்கள் எப்பிடிப் போக்கினவை தெரியுமோ. விளம்பரத்தால எண்டு சொல்லப்போறியள். கிடையாது.

ஆறு மாதத்துக்கு விளம்பரச் செலவு 10 லட்சம் ரூபா. அதை ஆறு மாத வேலை எண்ட அடிப்படையில பெண்களை தெரிவுசெய்து அவையளுக்கு குடுத்தவையாம். அவை வீடு வீடாத்திரிஞ்சு வித்தவை எண்டும் நினையாதையுங்கோ.

நீண்ட அழகான கூந்தல் உள்ளவை தெரிவு செய்யப்பட்டினம். அவயள் வாழுற பகுதியிலேயே ஷாம்பூ போட்டு முழுகின அழகான தலைமயிரை விரி கூந்தலாவிட்டு அந்தப் பகுதியள்ள நடக்கிற கலியாணவீடுகள் செத்தவீடுகள், கோயில்கள் திருவிழாக்கள் எண்டு திரிய வேணும். இது தான் வேலை.

இந்த அழகான கூந்தலின் ரகசியம் ஷாம்பூ தான் எண்டதோட அப்பப்ப தேவைக்குத் தக்கமாரி சின்னப்பையில அடைச்சு விற்பனைக்குவந்துது ஷாம்பூ.

இண்டைக்கு எங்கட ஊரில பெட்டிக்கடையோ, பெரியகடையோ, எத்தினை வகையான ஷாம்பூப்பையள் தொங்குது. எங்க கிணத்தடியில ஷாம்பூபை இல்லை.

இலுப்பம் விதையில எண்ணை எடுத்துப் போட்டு அரப்பைத் தலைக்கு வச்சு முழுகிற தெண்டா... நீங்கள் வேலை மினக்கட்ட நீங்கள் செய்தியள் எங்களுக்கு உது சரிவராது எண்ணுதுகள்.

சும்மா விடுங்கோ. இதுகளாலதானே வெளியில உள்ளவன் இப்பிடி உழைக்கிறான். சோம்பல் எண்டு சொல்லுறதே இப்ப ஒரு பாஷனாப் போச்சு. வேலை ஆர் செய்யிற?

# லொட்ஜ்

**வவுனியாவுக்கு** ஒரு தடவை போயிருந்தபோது நாய்களும், மனிதர்களும் ஒன்றாகப்படுத்திருக்கும் லொட்ஜ் ஒன்றைப் பார்த்தேன். நாய்களுக்குக் காசில்லை. மனிதர்களுக்கு காசு. நாய்களுக்குப்பாயில்லை. மனிதர்களுக்குப் பாய்கொடுப்பார்கள். ஆனால், இரண்டு தரப்பும் பார்ப்பதற்கு ரீ.வி. பொதுவாக வைக்கப்பட்டிருந்தது.

இந்த லொட்ஜ்ஜை ஒரு பொது நிறுவனம் நடத்திவருகின்றது. வெவ்வேறு கட்டணங்களுக்குரிய வசதிகளுடன் அறைகள், மண்டபங்கள், திறந்தவெளிகள் என்று தரம் பிரித்து வைத்திருக்கின்றார்கள். லொட்ஜ்ஜையும் நடைமுறையையும் வேறு அத்தியாவசிய வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய அக்கறையைவிட ரீ.வி.யை வைப்பதிலேயே லொட்ஜ்காரர்கள் கூடுதலான அக்கறைகொண்டிருக்கின்றார்கள்.

ரீ.வி. என்பது பொதுவாகவே வெற்றிகரமாக ஒரு பொழுதுபோக்குச்சாதன்மாக இருப்பதால் அதற்கு இந்தமுக்கியமான இடமளிக்கப்படுகிறது என்று ஒருவகையில் சொல்லலாம்தான். அதிலும், தமிழர்களைப்பொறுத்தவரையில் ரீ.வி. யின் கவர்ச்சியில் மீளமுடியாதளவுக்கு விழுந்துவிட்டவர்கள்.


வவுனியா லொட்ஜ்களில் நிரம்புவோர்கள் பெருமளவுக்கும் வன்னியிலிருந்து செல்வோர்கள்தான். வன்னியில் மின்சாரமில்லாதிருப்பதும் ரீ.வி. யின் சாதாரண பழக்கம் இல்லாதிருப்பதும் இன்னும் கூடுதலான கவர்ச்சியை வன்னியிலிருந்து செல்வோருக்குகொடுக்கின்றது. இது லொட்ஜ்காரர்களுக்கு மிகவசதியாகப்போய் விடுகின்றது. அவர்கள் ரீ.வி.யை மட்டும் வைத்துவிட்டு அதை எந்நேரமும் ஓடக்கூடியவாறு ஒழுங்கு செய்துவிட்டு ஏனைய வசதிகளையும் தேவைகளையும் வெட்டிக் குறைத்து விடுகின்றார்கள்.

லொட்ஜ்க்குப்போவோரிலும் ஒரு விதமனோநிலை செயற் படுவதை அவதானிக்கமுடிகிறது. இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குத்தானே நிற்கிறது. ஏதோ ஒருவாறு சமாளித்துவிட்டுப் போவோம் என்ற தன்மை லொட்ஜ்க்குப்போவோர்களிடம் அநேகமாகவுண்டு.

வெளிநாடுகளிலுள்ள தமது பிள்ளைகளுடன் அல்லது உறவினருடன் கதைக்கப்போகின்றவர்கள் தான் இதிலே கூடுதலானவர்கள். இன்னொரு தொகுதியினர் பொருட்களைக்கொண்டு செல்லும் அல்லது கொண்டு திரும்பும் சிறுவர்த்தகர்கள். இவர்களுக்கு கட்டாயம் லொட்ஜ் தேவையாக இருக்கின்றது.

லொட்ஜ்ஜில் தங்காமல் வேறிடங்களில் தங்குவதற்கும் இவர்களுக்கு வசதிக்குறைவாகவே இருக்கின்றது.

நண்பர் வீடுகளாயின் அவர்களுக்கு வீண் சிரமங்களைக் கொடுப்பதாக இருக்கும். அவர்களுடைய நகர வாழ்க்கைக்கு தங்களுடைய செய்கை மேலதிகச்சுமையாகிவிடும் என்று கருதி அங்கெல்லாம் செல் வதைத் தவிர்க்கின்றார்கள். போவோர் தவிர அங்கே போனாலும் ரெலிபோன் வசதி எல்லாஇடங்களிலும் இருக்கு மென்றுமில்லை. அத்தோடு பயணப்பிரச்சினைகளும் அதற்கான செலவும் மேலதிகமானது.



இப்படியான பிரச்சினைகளால் அவற்றைத் தவிர்த்துவிட்டு லொட்ஜிற்குப்போவதையே பலரும் விரும்புகின்றார்கள். இதுவும் லொட்ஜகளுக்கு வசதியாகிவிடும்.

ஈழப்போரின் விளைவுகளில் புலம்பெயர்வு எப்படியொரு முக்கியமான இடத்தை வகிக்கின்றதோ அதனுடன் தொடர்புடையதாக அதற்கு, அடுத்ததாக இந்த லொட்ஜ் அறி முகமும் வாழ்க்கையும் இடம் பிடித்திருக்கின்றது.

லொட்ஜ் கலாச்சாரம் ஒன்று உருவாகியிருப்பதையும் நாம் இங்கே அவதானிக்கலாம். கொழும்பு போன்ற இடங்களில் லொட்ஜ் அமைப்பு முறை இருந்தாலும் தமிழர்களிடத்தில் அது ஈழப்போரின் விரிவாகத்தான் பரவியது எனலாம்.

லொட்ஜ்களில் ஒரு வகைச் சுதந்திரம் இருக்கின்றது. வசதி இருக்கின்றது. பிறருடைய கட்டாயம், நெருக்குதல்கள் இல்லாத சுதந்திரம் அது. உறவினர் அல்லது நண்பர்கள் வீடுகளாயின் அவர்களுடைய உபசார அமைப்பு முறை அன்பாலும், நட்பாலும் நிகழும் அல்லது ஏற்படும் கட்டாயங்கள் அவர்களுடைய வாழ்க்கை அமைபுக்குள் நிற்க வேண்டிய கட்டாயம் எல்லாம் சுதந்திரத்தைக் குறைத்து விடுகின்றன.

லொட்ஜ்ஜில் கொடுக்கும் காசுக்குரிய இடம், வசதி அதற்கேற்ற வாழ்க்கை கிடைக்கும். இந்த வசதி ஒருவகையில் நன்மையளிக்கிறது. இன்னொருவகையில் சீரழிவுக்கும் கொண்டுபோய் விடுகின்றது.

அவசரமாகப் போகின்றவர்களுக்கும் அந்தரப்பட்டுப்போகின்றவர்களுக்கும் லொட்ஜ்கள் பெரு ஆறுதலையும் ஆதரவையும் தருகின்றன என்பது மறுக்க முடியாத உண்மைதான். இதை வைத்து வெளிநாடுகளிலிருக்கும் பிள்ளைகளுடன் தொடர்புகொள்ளுவதற்காக வருவோரிடம் லொட்ஜ்கள் பிடுங்கும் காசு கொஞ்சமல்ல.

ரெலிபோன் தொடர்புக்காக அவர்கள் அறவிடும் காசு ரெலிபோனில் கதைப்போரின் அறிவு, அனுபவத்தைப் பொறுத்து வேறுபடும். புதியவரொருவர் வந்து தட்டுத் தடுமாறினால் நேரக்கணக்கும் காசுக்கணக்கும் அதற்கு அவர்கள் சொல்லும் விளக்கங்களும்வேறு.

இதுபோலத்தங்குகின்றவர்களுக்கான தங்குமிட வசதியும் ஆளுக்குத் தக்கமாதிரி. நிலைமைக்குத் தக்க மாதிரி வேறுபடுகின்றது.

இப்போதும் இந்த நிலை தொடர் கின்றது. என்றாலும் யுத்தம் நடந்தகாலத்தைவிட இப்போது இது கொஞ்சம் குறைந்துதானிருக்கின்றது.

யுத்தம் நடந்த போதிருந்த இராணுவக்கெடுபிடிகளாலும் பாஸ் நடைமுறைகளாலும் கொழுத்தவற்றில் லொட்ஜ்களும் அடங்கும்.


**வெளிவாசல் பாலன்**


இதனால் புதிய புதிய லொட்ஜ்கள் முளைக்கத்தொடங்கின. பிராயணங்கள் கைகூடும் வரையான காத்திருப்புகள் லொட்ஜ்களில்தான். காத்திருப்புகள் தொடரும்வரை லொட்ஜ்க்கு காசிறைப்பதும் நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.

பிரயாணத்துக்கான அனுமதிக்கு பிணை ஏற்பாடுகளை அப்போது பல லொட்ஜ்கள் செய்தும் கொடுத்தன. சில நேரடியாக, சில மறைமுகமாக.


(15ம் பக்கம் பார்க்க...)

விவசாயப் பெருமக்களே!
சைவ உணவக உரிமையாளர்களே!
ஆயுர்வேத வைத்திய சிகாமணிகளே!
எமது ஸ்தாபனத்திற்கு ஒரு முறை விஜயம் செய்யுங்கள்





எம்மிடம் :
* நெல் குற்றும் இயந்திரம். * உமி நீக்கும் இயந்திரம் (China). * அரிசி பொலிசர் (China).
* மிளகாய், உழுந்து, கோப்பி அரைக்கும் (நவின் கெனடி பிராண்ட்) உலகப் பிரசித்தி பெற்ற இயந்திரம்.
* எந்த விதமான கடின உழைப்பிற்கும் அதிசக்தி வாய்ந்த (லிஸ்ரரைப்) பீசல் என்ஜின் (கெனடி நவின்)
மாக் 20 H.P 10 H.P (குதிரை சக்தி) கொண்டவை.
பெற்றரைப் 25 H.P 15 H.P 7 1/2 H.P 6 H.P (குதிரை சக்தி) கொண்டவை.
விசை கூடிய என்ஜின் (கெனடி நவின்) R.P.M. 1500.
* கோப்பி அரைக்கும் இயந்திரம்.
சைவ உணவகத்துக்கு உழுந்து சட்ணி, சம்பல் போன்று நீர் சேர்த்து
அரைப்பதற்கு கெனடி நவின் ஈர அரையல் இயந்திரம்.
2, 3, 5, 7 1/2, 10, 15, 20 கிலோ வரை அரைக்கும் அளவுகளில் உண்டு.
இவற்றில் மருந்து மூலிகைகளும் அரைக்க முடிவதால் வைத்திய சிகாமணிகளுக்கும் உகந்தது.
* ஈர அரிசி அரைக்கும் China மில்.
17, 23, 37, 42 போன்ற தங்கள் தேவைக்கேற்ப அளவுகளில் இயந்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
இவற்றுக்கான சகல உதிரிப்பாகங்கள் றபர், ரோமம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட பட்டிவகைகள் எல்லா அளவுகளிலும் "V" பெல்ட் (பட்டி) வகைகள். றபர் ஹோஸ், கிறைண்டர் பிளேற், சல்லடை வகைகள், மோட்டார் ஸ்ராட்டர் எல்லாம் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
* வங்கிக் கடன் வசதி அல்லது குத்தகை வசதி தேவையானால் ஒழுங்கு செய்து தரப்படும் (40% வரை).



(சி-7929)



நேரில் வரவும்
ஏக இறக்குமதியாளரும் விநியோகஸ்தரும்
சமுத்திரா ரேட்ஸ் லிமிட்டட்
117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P 021-2222938

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்
212, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021- 2225542

# அஞ்சு மஞ்சு சித்தி ஜனனி....

01

"எனக்கு ஒருநாள் அந்தத் தொடரிண்ட ஒரு கட்டம் பார்க்கா விட்டாக் கூட ஒழுங்காகச் சாப்பாடு இறங்காது"

"எனக்கு.....தொடர பார்த்த பிறகு றோட்டில இறங்கவே பயமாகக் கிடக்கு"

"வீட்டில எங்கேயேனும் வெளியில் போனாத்தான் அம்மா பேசுவா வீட்டேயே இருந்து ரி.வி. பார்க்கிறதெண்டா ஒரு பிரச்சினையும் இல்லை"

"பரீட்சை வந்தாலும் நான் விடாமல்.......தொடர ஒழுங்காப் பாப்பன். ஏனெண்டால் வீட்டில எல்லாரும் பார்க்கப் போடுவினம் தானே"

மேலே கூறப்பட்டவை தற்போது யாழ்ப்பாணத்திலோ அல்லது வவுனியாவிலோ எங்கையாவது மின்சார வசதியும், ஒளிபரப்பை உள்வாங்கும் வசதியும் உள்ள இடங்களில் எல்லாம் கேட்ட முடிந்த மாந்தர்களின் மனவெளிப்பாடு.

முதலாவது - ஒரு குடும்பத் தலைவியின் அயலவரினுடனான உரையாடலே. இன்று அதிகம் அவர்களை வேலைவாங்குவது அவர்கள் வீட்டிலிருக்கும் தொ.காட்சியே ஆகும். எப்படியாயின் அடுத்து ஒளிபரப்பாகப் போகும் தொடர் நர்டகம் அவருடைய அன் றாடக் கடமைகளில் வேகத்தை ஊட்டுகிறது. வழமையாக இரண்டு மணித்தியாலங்கள் எடுக்கும் சமையலை தொ.காட்சித்தொடர் அரைமணித்தியாலங்களாக்கிவிடும். அதிலும் பலருடைய சமையலறை தொ.காட்சியின் முன்பே களைகட்டி விடுகிறது.

இரண்டாவது ஒரு பாடசாலை மாணவியின் நண்பர்களுடனான உரையாடல். குறிப்பிட்ட தொ.காட்சித்தொடர் சமூகத்தில் அப்பெண்ணினுடைய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக மாறியிருக்கிறது. அனேகமான பாடசாலைகளிலும் ரியூசனிலும் மாணவிகளுடைய உரையாடல்கள் தொ.காட்சியை சுற்றியே வருகிறது. அவர்களினுடைய நிறைவேறாத மன ஆதாங்கங்களை தொ.காட்சியில் தோன்றும் கதாநாயகிகள் நிறைவேற்றி விடுகிறார்கள். அதுவும் மூன்று மணிநேர சினிமாவைப் போலல்லாது மூன்றுவருட தொடர்களாகவே நிறைவேற்றுகிறது.

மூன்றாவது- துடுக்குத் தனம் நிறைந்த ஒரு வளரும் சிறுவனின் நண்பனுடனான உரையாடல். அனேகமான வீடுகளில் இன்று நிரந்தரமாகிப்போன நிகழ்வாகிவிட்டன இவை. மைதானத்தில் இறங்கி ஓடித் திரிந்து நண்பர்களுடன் கூடிக்கழித்து தனது உள்ளத்தையும் உடலையும் ஒருசேர வளர்க்கவேண்டிய அந்த இளசு தொ.காட்சிமுன் கற்பனைக் கதாநாயகனுடன் தன் போர்வையின் உதவியுடன் பறக்க முற்படுகிறது. அவனின் துடுக்குத்தனம் தொ.காட்சி பெட்டிக்குள் மடித்து அடுக்கப்படுகிறது.



நான்காவது - பரீட்சை எழுதப்போகும் ஒரு மாணவனுடைய உரையாடல் சந்திக்கப் போகும் பரீட்சை பற்றியோ எதிர்கால கல்விபற்றியோ அல்லது அவனைப் பற்றியோ அவனுடைய குடும்பம் அக்கறைப்படவில்லை. அவர்கள் அனைவரது அக்கறையும் தொ.காட்சியின் வண்ணமயமான தொடர் பற்றியதே. தங்கள் பிள்ளையின் வாழ்க்கைத் தொடருக்காக அற்பம் ஒரு தொ.காட்சித் தொடரை விட்டுக் கொடுக்க அவர்கள் தயாரக இல்லை.

சாதாரணமாக எந்தவிதமான பிரதிபலன்களும் அல்லாத தனியே பொழுது போக்கிற்காக மட்டுமே பார்க்கக் கூடிய தொ.காட்சித் தெடர்கள் மாந்தர்கள் மத்தியில் செலுத்தும் தாக்கமென்பது மொத்தத்தில் அவர்களுடைய காலத்தையும், எதிர்காலத்தையும் சேர்த்தே நாசமாக்குகிறது. ஆரம்பத்தில் குறிப்பிட்ட சில உரையாடல்களை மட்டுமேவைத்து தொ.காட்சித் தொடர்கள் பற்றியோ பார்க்கும் மாந்தர்பற்றியோ நான் கதைக்க வரவில்லை. எனது காதிலேயே எனது ஊரிலேயே தினமும் நான் சந்திக்கும் தொடர் பற்றிய அவலங்களையே இங்கு குறிப்பிடுகிறேன். இவ்வளவுக்கும் கூறியவை சிறிய மாம்பழங்களே. பாரிய முட்கள் நிறைந்த பலாப் பழங்களை சுமந்து நிற்கும் மாந்தர்கள் பற்றி இனிவரும் என்கதைகள் கூறிநிற்கும்.

வளரவேண்டியவர்கள் வளர்க்கப்படவேண்டியவர்கள் வளர்க்க வேண்டியவர்கள் என மூன்று சந்ததியுமே ஒரு சிறு தொ.காட்சிப் பெட்டியை சுற்றியமர்ந்து ஒப்பாரி வைப்பது தாங்களே பாடையில் ஏற்றி விடத் துடிக்கும் தங்கள் சமூகத் துக்காகவா என்ற கேள்வி மனதில் எழுவதைத் தவிர்க்க முடியாதபடி உங்களிடமிருந்து தற்காலிகமாக விடைபெறும்

**சஞ்சீவன்,**
**வண்ணார்பண்ணை,**


# சேரன் சுவையகம்

சேரன்





கிளிநொச்சி நகரில்
புதுப்பொலிவுடன்....

உலகத்துச் சிறப்பெல்லாம் உங்கள் முன் வைக்கின்றது

சேரன் சுவையகத்திற்கு உள்ளே.....

உலகத்தைச் சுற்றிய உணர்வுதரும் உணவு வகைகள்

உங்கள் விருப்பம்!

உங்கள் தெரிவு!

பலவகை உணவு!

இனிப்பு! உறைப்பு!!

உவர்ப்பு!!! புளிப்பு!!!!

சிறந்த தரம்
சிறந்த சுவை
சுத்தம்
விரைந்த சேவை

ஆகா! ஓகோ!! பல்சுவை

சுடச்சுட... இதமான சூட்டில்----- சுவைத்து மகிழ!

குளிர்களி! குளிர்பானம்!! மனம்குளிர்ந்து மகிழ

ஒரே இடம்

## சேரன் சுவையகம்

உங்கள் உணவுத் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்ய நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

காலை
நண்பகல் } சிறப்பு உணவு வகைகள்
இரவு

* சிற்றுண்டிகள்
* பானங்கள்
* சேரன் வெதுப்பக சிறப்பு உற்பத்திகள்

உங்கள் விருப்புக்கேற்ப தயாரித்து வழங்கப்படும்

குறிப்பு :-விழாக்கள் /நிகழ்வுகளுக்கான வேண்டுகைகள் உரிய கால முன்னறிவிப்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகட்கு:- சேரன் சுவையகம்
கண்டி வீதி, கிளிநொச்சி.

தொலைபேசி
எண்:021-2225709

(3260)

# நேர்நோக்கு

## என்றோ பறிபோய்விட்டது

இலங்கையின் ஒருமைப்பாடு இறைமைபற்றி சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமாகிய லக்ஷ்மன் கதிர்காமர் பலமாகக் கவலைப்பட்டிருக்கிறார்.

தற்போது தடைப்பட்டிருக்கும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக சிறிலங்காப்பிரதமர் ரணில்விக்கிரமசிங்க ஆற்றிய உரைக்கு அவர் பதிலளிக்கும் போதே இதுபற்றி அவர் பிரஸ்தாபித்தார்.

அவர் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் வெளிநாடுகளுக்கு ஓடியோடி செய்த சேவை காரணமாக சிங்கள இனவாத அமைப்புகள் சிலவற்றால் சிறந்த தேசியவாதி எனப்புகழப்பெற்றவர்.

லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு தமிழராக இருந்து கொண்டு தமிழ் மக்களின் போராட்டத்துக்கு எதிராக அவர் செய்த சர்வதேசப் பிரசாரம் காரணமாகவே இந்தப்புகழ் அவருக்குக் கிடைத்தது.

இதற்கு இன்னமும் வலுச்சேர்ப்பதற்காக, தமிழ் மக்களுடன் சம்மந்தப்பட்ட சமாதான நடவடிக்கைகள் தொடர்பான விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் சந்தர்ப்பத்தையும் பொதுசன ஐக்கிய முன்னணி அவருக்குக் கொடுத்திருந்தது. அவரும் தனது பணியைச் செவ்வனே செய்து முடித்திருக்கிறார்.

இதேவேளை அவர் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் ஏழு வருடகாலமாக தீவிரமாக எடுத்த முயற்சி தமிழ் மக்களின் போராட்டத்தைப் பயங்கரவாதப் போராட்டமாக காட்டவும் விடுதலைப்புலிகளை சில நாடுகள் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனப்படுத்தவும் உதவியது.

ஆனால் அவையெல்லாம் கடந்த 14 மாதங்களில் உடைத்தெறியப்பெற்று இலங்கையில் முக்கியத்துவம் மிக்க தரப்பாக விடுதலைப்புலிகள் அங்கீகரிக்கப்பட்டமை ஒன்றுமில்லாதது ஆக்கிவிட்டது.

அவரின் கடுமையான முயற்சிகளையெல்லாம் விடுதலைப் புலிகள் முறியடித்து ஒன்றுமில்லாது செய்துவிட்டனர்.

இவ்வாறான நிலையில் சமாதான முயற்சிகளில் இடம் பெற்றுள்ள தேக்கநிலையைப் பயன்படுத்தி கதிர்காமரும் தனது பங்கிற்கு இவ்வாறானதொரு உரையை ஆற்றியிருக்கிறார்.

ஆனால் அவர் கூறிய ஒருமைப்பாடானது அவர் செய்த பொய்ப் பிரச்சாரத்தாலும் அவர் சேவை செய்த அரசாங்கம் நடத்திய "சமாதானத்துக்கான" யுத்தத்தாலும் என்றோ இல்லாது ஒழிந்துவிட்டது என்பதே உண்மையாகும். அதாவது இவற்றுக்கெதிராக தமிழ் மக்கள் அனைவரும் இணைந்து நடத்திய தீவிரமான இராணுவ அரசியல் போராட்டமானது இவர்களின் முயற்சிகளை யெல்லாம் உடைத்தெறிந்த பொழுதே அவரின் "நாட்டின்" ஒருமைப்பாடு இல்லாது ஒழிந்து விட்டது.

அதேபோல இவ்வாறு தமிழ் மக்களுக்கெதிராக அவர் சேவைசெய்த அரசாங்கம் நடத்திய யுத்தத்திற்காக சிறிலங்காவின் இறைமை என்றோ அடகு வைக்கப் பட்டுவிட்டது. யுத்தத்திற் குச் செலவு செய்யவெனபெரு மளவில் அவர்கள் பெற்ற கடனானது இப்பொழுது மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக ஆனையிறவில் பெற்ற தோல்வியின் பின் மேற்கொள்ளப் பட்ட ஆயுதக் கொள்வனவுக்கு பெற்ற கடன் எவ்வளவு என்பதே இதுவரை தெரியாது.

இவ்வாறு பெருந்தொகைக்கடனை வழங்கியவர்களுக்கு சிறிலங்கா என்றோவிலை போய்விட்டதாகவே கூறவேண்டும். இக்கடன்களை யெல்லாம் விரைவில் மீளச் செலுத்தும் நிலையிலும் சிறிலங்கா இல்லை. அதன் காரணமாக சிறிலங்காவின் தேசிய வளங்கள் ஒவ்வொன்றும் பல்தேசிய நிறுவனங்களுக்குப் படிப்படியாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. அவைமட்டுமல்ல அரசாங்க நிறுவனங்களுடன் கூட அவற்றில் பணிபுரியும் பணியாளர்களுடன் சேர்த்தே தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்பட்டு வருகின்றன.

காலப்போக்கில் சிறிலங்காவின் "இறைமையுள்ள" அரசு எதனை நிர்வகிக்கப்போகிறது என்ற கேள்வி கூட எழலாம். இவை எல்லாவற்றுக்கும் காரணம் தமிழ் மக்களின் உரிமையை சிங்கள இனவாதம் அங்கீகரிக்க மறுத்து வருவதாகும்.

எனவே அவ்இனவாதத்திற்குச் சேவை புரியும் கதிர்காமர் கூறினாலும் கூறாவிட்டாலும் சிறிலங்காவின் இறைமை பறிபோனது போனதுதான்.

**வேலவன்**

---

### லொட்ஜ்....

(13 ஆம் பக்கத் தொடர்)

சில லொட்ஜ்களுக்கும் இராணுவத்தின் கெடுபிடி நடைமுறைக்கும் உழைப்புக்கருதி ஒப்பந்த அடிப்படையிலான ஒருறவு நிலவியதாக இன்னும் பலரது அபிப்பிராயமுண்டு.

இப்போது அமைதிக்காலம். இந்த அமைதிக்காலத்தில் எல்லா இடங்களிலிருந்தும் எல்லோரும் போய் வருகின்றார்கள். இதனால் எல்லா இடங்களிலும் லொட்ஜ்கள் புதிதாக முளைத் திருக்கின்றன. ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு மாதிரியான நடை முறைகளும் தோன்றியுமிருக்கின்றன. வெவ்வே றான அணுகுமுறைகள், நடைமுறைகளிலிருந்தாலும் சனங்களிடம் .காசைக் கறப்பதிலும் வசதிகளைக் குறைப்பதிலும் எல்லா லொட்ஜ்களும் ஒரே மாதிரித் தானிருக்கின்றன.லொட்ஜ் அனுபவங்களைக் கேட்டால் ஒவ்வொருவரும் நிறையக் கதைகளைச் சொல்வார்கள். அந்தக்கதைகளினூடு தொகுத்துப் பார்த்தால் லொட்ஜ்களில் நிலவும் மோசடிகளையும் மதிப்பின்மைகளையும் உணரலாம்.

ஆனாலும், திரும்பத்திரும்ப வேறுவழியில்லாமல் சனங்கள் லொட்ஜ்ஜையே நாடவேண்டியிருக்கின்றது. இது லொட்ஜ்காரருக்கும் வசதியாகிவிடுகின்றது.

லொட்ஜ்களில் நடக்கும் தில்லுமுல்லுகளும் இதில் சொல்லப்படாமல் விட்டிருக்கும் சீரழிவுகளும் பலருக்கும் நன்றாகத்தெரிந்தவை.

லொட்ஜ் கலாச்சாரம் ஈழத்தமிழருக்கு தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. ஆனால், அது இத்தனை சடுதியாக சீரழிவுக்குப் போயிருப்பது தான் கவலை.

வசதியை அளிக்கவேண்டிய ஒருவித சேவையுடன் நடத்தப்பட வேண்டிய கண்ணியமான தொழில், கண்ணியக்குறைவான நடத்தைகளுக்கு இடமளிப்பதன் மூலமும் கண்ணியக்குறைவாக நடப்பதன் மூலமும் கீழான தொழிலாக மாறிக் கொண்டிருக்கின்றது. காசு வந்தால் சரி என்பதற்காக எதையும் எப்படியும் செய்யலாம் என்றில்லைத்தானே! ▲

---

### ஏமாந்தவர்....

(05 ஆம் பக்கத் தொடர்)

அரசியல் தீர்வுகுறித்தும், அதற்குத்தடையாகவுள்ள சிறிலங்காவின் அரசியல் யாப்பு குறித்தும், அரசியல் யாப்பை மாற்றியமைப்பதனால் அதற்கான முட்டுக்கட்டைகள் எவை என்பது பற்றியும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர் மத்தியிலும், களத்திலும் உரையாற்றுகையில் அடிக்கடி கூறிவருகிறார்.

இன்றைய சர்வதேச சூழ்நிலைகளும், தமிழர் மீது விரிக்கப்பட்டுள்ள சர்வதேச வலைகுறித்தும் விடுதலைப்புலிகளுக்கு நன்றாகவே புரியும் இன்றைய காலகட்டத்தில் புலிகள் தமது இராஜதந்திர காய் நகர்த்தல்களை திறமையாகவே கையாள்கின்றனர் என்பதை வரலாறு கூறும்.

அண்மையில் ஜப்பானியப் பிரதிநிதி யசுஷி அகாசியிடம் -உதவி வழங்கும் மாநாட்டை ஒத்திப்போடுவார்களா என பீ.பீ.சி கேட்டபோது அவர் சொன்னார் -

"ஜப்பான் நாடு பாரிய கப்பல் போன்றது. அது நிர்ணயித்த திசை வழியேதான் பயணிக்கும். நிற்பதோ அதன் வழிகளை அடிக்கடி மாற்றிக் கொள்வதோ சிரமமானது"

. அதைக் கேட்டதும் என் மனதில் தோன்றியது இது -

விடுதலைப்போராட்டம் என்பது அந்தரத்தில் கயிற்றின் மீது நடந்து செல்வதைப்போன்றது. சற்று நிதானம் தவறினாலும் விபரீதமாகிவிடும். ▲






---

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –18



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –18

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள் 17



காரை - விசாகன்,
"கனகா ஸ்ருடியோ"
ஆலடி, காரைநகர்.

### பரிசுக்குரிய வரிகள்

**பசிக்கு நீ அழுதிருந்தால் ஒரு விருந்தே தந்திருப்பேன்**
**நோய்க்கு நீ அழுதிருந்தால் அருமருந்தே தந்திருப்பேன்**
**எதற்கு நீ அழுதாலும் எடுத்ததை தந்திருப்பேன்**
**தாய்க்கு நீ அழுகிறாயே! எதைஐயா நான் தருவேன்?**

### பாராட்டுக்குரிய வரிகள்

*தாய்ப்பால் இல்லை என்று அழுகிறாயா? இல்லையே*
*இல்லை தமிழருக்கென்று தனிநாடு இல்லையா?*
*என அப்பாவிடம் உணர்ச்சி வசப்பட்டு*
*கேட்கிறது மழலை மொழியில்.*

த.நிசாந்,
இல: 189, கந்தபுரம்,
கிளிநொச்சி.

*யுத்த ஓய்வின் பின்னால் - இன்று*
*A9 பாதையில் உன்தாயும் பலியானால்*
*அம்மா என்றழைக்க உன்தாய் அருகில்லை என தெரிகிறது*
*அழாதே கண்னே அரவணைத்திட அப்பா இருக்கின்றேன்*

கனி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

*பாழாய் போன பாவியர்கள் - பச்சைப்*
*பாலகனைக் கூட 'விட்டார்களோ?*
*வேதனையை தாங்காத பிஞ்சுமனம் தவிக்கிறது.*
*சோதனையைப் பொறுக்காத பெற்றமனம் துடிக்கிறது.*

R.டிலக்ஷன்,
33திருநகர், கிளிநொச்சி.

*அழுதால் வருவாள் தாய் என்று*
*பிஞ்சுக் குழந்தை கதறி அழுதே*
*அவள் இறந்த நிலையை எண்ணும் போது*
*அணைக்கும் உள்ளமும் விம்மி அழுதே.*

நாவண்ணன்,
முல்லை வீதி,
புதுக்குடியிருப்பு.

*இவனது தாய்*
*இனவாதக் குண்டுக்கு*
*இரையாகிப் போனதை*
*எப்படி புறிய வைப்பேன்?*


கு.தவசீலன்,
விசுவமடு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.





பக்கத்தில் காணப்படும் இரத்தினக்கற்களை ஏந்தியிருக்கும் கைகளுக்கும் மேலே காணப்படும் படத்திற்கும் என்ன தொடர்பு என நீங்கள் சிந்திப்பது தெரிகிறது. இது வேறெங்கும் இல்லை. திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசத்தின் ஒரு காட்சியே. முன்னர் சீனித்தொழிற்சாலைக்கான கரும்புத்தோட்டங்கள் அமைந்திருந்த வயற்பகுதிகளிலே இப்பொழுது சிங்களக்குடியிருப்புகள் புதிதாக முளைக்க ஆரம்பித்து விட்டன. இப்பகுதிகளில் நிலங்களைத் தோண்டினால் இரத்தினக்கற்கள் கிடைக்கின்றன என்ற செய்தியே அவர்களை இங்கு வரவை அதிகரித்திருக்கிறது என்கிறார்கள். அப்படியாக தோண்டப்பட்ட வயற்காணி ஒன்றுடன் சிங்கள குடியிருப்புகள் மேலே.



## இருக்குமிடத்தில் இருந்து கொண்டால்...

இருக்குமிடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே என்று குடுவைக்குள் இருக்கும் பூனைக்குட்டி மீனைப்பார்த்து கூறுவது போல் இருக்கும் இந்தக்காட்சி கணனியின் ஒரு கண்ணாமூஞ்சி விளையாட்டே.



## கத்திச்சண்டையில்...

கணனியின் கைக்குள் பூனைகளும் தப்பவில்லை. அழகாக உடையணிந்து கத்திச்சண்டையில் இறங்கியிருக்கும் பூனையார்களுக்கு கணனியே சொந்தம்.




இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.